RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710



மலர்:- 29, 17 பெப்ரவரி 2023 இதழ்:- 43

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600



NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B.
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE


## விடுதலைப் புலிகளின் தலைவரின் மீள் வரவு பற்றிய பித்தலாட்டத்தின் பின்னால் உள்ள அரசியல்!



தமிழீழ விடுதலைப் புலிகளையும் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் தவிர்த்து இலங்கை இந்திய அரசியல் ஒரு சாண் கூட நகராது என்பதற்கு அண்மைய பரபரப்புக்கள் உதாரணமாகும்.

14 பெப் 2023 செவ்வாய்க்கிழமை தமிழக அரசியல் தலைவர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட குழுவினர் திடீரென ஏற்பாடு செய்த ஊடகச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் (9ம் பக்கம் பார்க்க)

## ரொறன்ரோ நகர முதல்வர் பதவி துறப்பும் ஈழத்தமிழரும்



*Toronto* நகர முதல்வர் *John Tory* திடீரென தனது பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தது நாடளா விய ரீதியில் பெரும் அதிர்வலைகளை தொடர்ந்தும் ஏற்படுத்தி வருகிறது. நகர முதல்வர் பதவியில் இருந்து *John Tory* யின் வெளியேற்றம் *Toronto* நகருக்கு ஒரு சோகமான நிகழ்வு. இந்த பதவி விலகலுக்கு காரணம் ஒரு ஈழத் தமிழ் பெண் என்ற வதந்தி கடந்த சில நாட்களாகவே பரவி வருகிறது. இது வெறும் வதந்தியே! (5ம் பக்கம் பார்க்க)

## தமிழ் புலம்பெயர் சமூகம் என்ன செய்யலாம்?

கட்டுரையாளர்:- யசீந்திரா

## பலாலியில் விடுவிக்கப்பட்ட காணிகளும் தொடரும் நெருக்கடிகளும்! பக்கம்18

போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!


KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!




**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Lawrence/ Galloway

**Scarborough** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
Close To Shopping, Hospitals


### Finch & Pharmacy

**Scarborough** $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Area

### Eglinton/Markham

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated with Oversized Balcony

### Angeline St. N & Springdale

**Kawartha Lakes** $749,900
Bedrooms: 3 Washrooms: 2
Brand New, Walkout Basement

### Kennedy & Dougall Ave

**Caledon** $799,888
Bedrooms: 3 Washrooms: 3
Semi-Detached Home

### Queens Quay & Lower Sherbourne

**Toronto** $889,000
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit

### Brisdale & Clockwork

**Brampton** $1,985,000
Bedrooms: 4 Washrooms: 4
Assignment Sale, Brand New Home

### Meadowvale / 401

**Scarborough** $1,899,999
Bedrooms: 4+3 Washrooms: 5
Stunning Top To Bottom Renovations

### Kipling Ave / Finch Ave

**Toronto** $549,900
Bedrooms: 2 Washrooms: 2
Location Location Location!!!

### Simcoe St & Winchester

**Oshawa** $549,999
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Layout, Large Windows

### Woodbridge Ave/ Clarence

**Vaughan** $799,000
Bedrooms: 1+1 Washrooms: 1
Low-Rise Boutique Style Building

### Eglinton Ave. W /Mavis

**Mississauga** $799,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Charming Townhouse In A Great Area

### Keele/Sheppard

**Toronto** $810,000
Bedrooms: 3 Washrooms: 2
Bungalow-Raised Excellent Property

### Mccowan & Ellesmere


**Scarborough** $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout

### Martingrove/Rexdale


**Toronto** $2,900
Bedrooms: 3 Washrooms: 1
Renovated Main Floor Unit

### Markham & Sheppard


**Scarborough** $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Unit With Parking

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# தலைவர் பிரபாகரன்!

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் எனவும் அவர் விரைவில் தமிழ்த் தேசிய வேலைத் திட்டத்துடன் வரவுள்ளார் என்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ்த் தேசிய பேரியக்கத்தின் தலைவராக தன்னை அடையாளம் காண்பிக்கும் நெடு மாறன் தெரிவித்திருந்தார்.

பிரபாகரன் உடல் காண்பிக்கப்பட்ட சூழலில், அவரின் மறைவுச் செய்தியை, அப்போது விடுதலைப் புலிகள் இயக்க த்தின் சர்வதேச பொறுப்பாளராக இரு ந்த குமரன் பத்மநாதன் (கே.பி) உறுதி ப்படுத்தியிருந்தார்.

ஆனால், புலிகள் சார்பான அமைப்புகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகள் எவையுமே பிரபாகரனின் மறைவுச் செய்தியை அங்கீகரிக்கவில்லை.

இவ்வாறானதொரு சூழலில் தான், நெடு மாறன் பிரபாகரன் தன்னுடன் தொடர் பிலிருக்கிறாரென ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்.

இப்போது, 13வருடங்கள் கழித்து திடீரென்று பிரபாகரன் தொடர்பில் பரப்பரப்பை ஏற்படுத்தியிருக்கின்றார்.

நெடுமாறன் இவ்வாறு கூறியதைத் தொடர்ந்து வழமை போல் உளவுத் துறை புனைகதைகளை பலரும் கூற முற்படுவதை காணமுடிகின்றது.

வெறும் ஊகங்களை முன் வைத்து இவ்வாறான விடயங்களை அணுகு வது தவறானது.

ஆனால், ஈழ ஆதரவு என்னும் பெயரில் பலர் விடுதலைப் புலிகளின் தியாக த்தை தங்களின் சொந்த நலன்களுக்கு பயன்படுத்தி வருவது இரகசியமான தல்ல.

தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளும் இதனை சிறப்பாக செய்வதுண்டு இதன் காரணமாகவே பிரபாகரன் தொடர்பில் சர்ச்சைகள் எழுகின்ற போது இவர்கள் அமைதி யடைந்து விடுகின்றனர்.

தமிழ்நாட்டு குழுக்களை கண்டிப்ப தில்லை.

2009இல் பிரபாகரன் போரில் வீரமரண த்தை தழுவிக் கொண்டார் என்று அறிவிக்கப்பட்டபோது, அதனை அப்போது பலரும் ஏற்றுக்கொள்ள வில்லை.

அப்போது பலரும் தயங்கியதைக் கூட ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம்.

ஏனெனில் அந்தளவுக்கு மக்கள் மத்தி யில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும் அதன் தலைவரான பிரபாகரன் மீதும் பிரமிப்பும் நம்பிக்கையும் இருந் தன.

ஆனால், யுத்தம் முடிவுற்று பதின் மூன்று வருடங்களின் பின்னரும் அவர் இருக்கிறாரெனக்கூறும்போது சந்தேகங்கள் ஏற்படுவது இயல்பானது.

இதற்கு பின்னால் என்ன இருக்கின் றது? எதற்காக இவ்வாறான கதை யொன்று இப்போது புனையப்படுகின் றது?



இவ்வாறான கேள்விகள் எழுவது இயல்பானதே ஆனால், இங்கு கவனி க்க வேண்டிய விடயம்.

நெடுமாறன் இப்போதும் கூட இவ் வாறான கதைகளை துணிந்து கூறு வதற்கு என்ன காரணம்?

உண்மையில் புலம்பெயர் அமைப்புக் களதும் விடுதலைப் புலிகளை முன் வைத்து தேர்தலில் போட்டியிடும் கட்சிகளினதும் துணிவின்மையும் இயலாமையுமே இதற்கான காரண மாகும்.

ஏனெனில், முள்ளிவாய்க்கால் அவலம் இடம்பெற்று பதின்மூன்று வருடங் களாகின்றன.

இந்தப் பதின்மூன்று வருடங்களாக புலம் பெயர் நாடுகளில் மாவீரர் நாள் நினைவுகூரப்பட்டது.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட தைத் தொடர்ந்து, தமிழர் தாயகத்தி லும் மாவீரர் நாள் நிகழ்வுகள் முன்னெ டுக்கப்பட்டன.

ஆனால், எங்குமே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவராக இருந்த பிரபாகரன் தொடர்பில் எவருமே வாய் திறக்கவில்லை.

களத்தில் அதனைப் பேச முடியாது. ஆனால், புலத்தில் ஏன் பேசமுடிய வில்லை?

ஒரு வேளை பிரபாகரனுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தால் இப்போது நெடு மாறனால் இவ்வாறு கூற முடியாது போயிருக்கும்.

எனவே பிழைகளை ஈழத் தமிழ்த் தேசிய செயல்பாடுகளிலிருந்து தான் நோக்க வேண்டுமேயன்றி மாறாக மற்றவர்கள் மீது குற்றம் சாட்டுவதில் பயனில்லை.

அவர் இறக்கவில்லை என்பதால் தானே அவருக்கு எவருமே அஞ்சலி செலுத்த வில்லை.

அவ்வாறாயின், இப்போது நெடுமாறன் கூறுவதற்கு பின்னால் ஏதேனும் பின்னணி இருக்குமென்றால், கடந்த பதின்மூன்று வருடங்களாக பிரபாகரன் தொடர்பில் ஆழ்ந்த அமைதி காண் பிக்கும் புலம்பெயர் அமைப்புக்களின் செயல்பாடுகளின் பின்னணி என்ன?


எனவே, ஈழத் தமிழ் அரசியல் அவ்வப் போது குழப்பப்படுகின்றது என்றால், அதற்கான காரணங்களை எங்கள் மத்தியிலிருந்து. தான் தேட வேண்டு மேயன்றி மற்றவர்களிடமிருந்தல்ல.

ஆனால், எங்கள் மத்தியில் ஓர் அரசியல் நோயுண்டு.

அதாவது, ஏதாவது, நடந்தால் அதற் கான பழியை ஒன்றில் இலங்கையின் மீது அல்லது ஏதாவது நாட்டின் உளவுத்துறைகள்மீது சுமத்தி விட்டு எங்கள் பொறுப்பிலிருந்து தப்பியோடி விடுவது.

எங்கள் பிரச்னைகளுக்கான காரணங் களை எங்களுக்குள் தேடினால் மட்டும் தான் இந்த நோயைப் போக்க முடியும்.

### இருந்தாலும் மறைந்தாலும் வரி ஒன்று தான்!



வருவார் என்போர் சொல்லட்டும்
மறைந்தார் என்போரும் சொல்லட்டும்
எதுவாய் இருந்தாலும்
இறைவன் அவனே தான்
அப்படியே அவரை இருக்க விடுங்கள்...
துதி பாடிப் பாடியே
துரோகம் இழைத்தீர்கள்
தூரத்தில் இருந்து கொண்டே
யாவும் அடைந்தீர்கள்...
கதை பேசிப் பேசியே
காலம் கழித்தீர்கள்
கடைசி வரை அவரை
காப்பாற்ற மறந்தீர்கள்...
முகவரிகள் தெரியாமலே
முடிந்து போனோர் ஆயிரம்
முடமாகித் தெருவெங்கும்
அலைந்து போனோர் ஆயிரம்...
தொலை தூரம் போய் அலைந்து
தொலைந்து போனோர் ஆயிரம்
ஒரு வேளை உணவின்றி
உருக்குலைந்தோர் ஆயிரம்...
இதுவரைக்கும் இருந்த இடம்
இல்லாதோர் ஆயிரம்
இருப்பதற்கு ஏதுமின்றி
இருப்பவர்கள் ஆயிரம்...
அவனிருந்தால் அத்தனைக்கும்
ஆறுதல்கள் கிடைத்திருக்கும்
ஆகையினால்
ஐயா! வேண்டாம்
கொச்சைப் படுத்தாதீர்...
எதுவரைக்கும் போகுமென்று
எவருக்கும் தெரியாது
ஏறெடுத்துக் கேட்கின்றோம்
எங்களை விற்காதீர்!!!
அவரை அப்படியே வாழ விடுங்கள்!!!

–கவிஞர் ம.தயாகுணன்

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி முறை சாத்தியமில்லை! 13ஐ நடைமுறைப்படுத்துவதால் நாடு பிளவுபடாது!

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாடு பிளவுப்படும் என்ற சந்தேகம் நாட்டு மக்கள் இடத்தில் உள்ளது.

உண்மையில் 13ஐ நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாடு நிச்சயம் பிளவுபடாது . ஒற்றையாட்சிக்குள் ஒரு போதும் சமஷ்டிக்கு சாத்தியமில்லை என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை பேராசிரியர் சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

11ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

13 ஐ நடைமுறைப்படுத்துவதன் மூலம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாடு பிளவுபடுவதற்கான ஏற்பாடுகளும் அதில் இல்லை.

குறிப்பாக இன்று பலருக்கு 13 ஆவது திருத்தம் தொடர்பில் போதிய அறிவு இன்மையே இதற்கான காரணமாகும். அதாவது இந்த திருத்தத்தில் சகல அதிகாரங்களையும் மத்திய அரசு மீள பெற்றுக்கொள்ள கூடியதாகவும், மத்திய அரசாங்கம் கட்டுப்படுத்த கூடியதாகவும் காணப்படுகிறது.

மாகண சபை முறைமையில் முதலமைச்சரை விட அதிகளவு அதிகாரம் கொண்டவராக ஆளுநர் காணப்படுகிறார். அவரை நியமிக்கின்றவர் ஜனாதிபதி. எனவே ஜனாதிபதி தனக்கு விருப்பமான நபர் ஒருவரை ஆளுநராக நியமிக்க முடியும்.



நாடுப் பிளவுபட்டு விடும், இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படும், இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் இலங்கை சென்று விடும் அல்லது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இந்தியாவுடன் இணைந்து விடும் என்று பலரும் கூறுகிறார்கள். இந்நிலையில் இந்த 13 இல் என்ன இருக்கிறது என்பது கூட அவர்களுக்கு தெரியாது.

குறிப்பாக காணி அதிகாரத்தை எடுத்து கொள்வோமாயின், காணி அதிகாரங்கள் 13 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ளதா? என்பதே ஒரு கேள்வியாகும்.

இருப்பினும் இது தொடர்பில் முன்னர் சிக்கல் தோன்றி பின்னர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட நிலையில் அதன் தீர்ப்பு காணி அதிகாரங்கள் 13க்கு சொந்தமானவையல்ல என்று நீதிமன்றம் தீரப்பு வழங்கியது.

மத்திய அரசு காணிகளை மாகாண சபைக்கு வாங்கியிருந்தால் அதை பயன்படுத்த மாத்திரமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இல்லாத ஒன்றை எவ்வாறு ஜனாதிபதி வழங்க போகிறார்? என்பதே எனது கேள்வியாகும். மேலும் ஒற்றையாட்சிக்குள் சமஷ்டிக்கு சாத்தியம் கிடையாது. இலங்கை என்பது ஒற்றையாட்சி நாடாகும். சமஷ்டி என்பது அதிகாரங்கள் மத்திய அரசிற்கும்,

மாகாண அரசிற்கும் மாநிலங்களுக்கும் பகிரப்படவேண்டும். ஆனால் 13 ஆவது திருத்தத்தில் பகிரப்படவில்லை. மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றொரு திருத்தத்தை கொண்டு வந்து மீள பெற்றுக் கொள்ள முடியும். இங்கு அதிகாரங்கள் பிரிபடவில்லை. ஆனால் சட்டவாக்க அதிகாரம் மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் அடுத்த மட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அது அதிகார பரவலாக்கம் என்று கூறலாமே தவிர அதிகார பகிர்வு என்று கூறமுடியாது.

சமஷ்டி எனும் போது அதிகாரப் பகிர்வும். அதாவது 13 ஆவது திருத்தத்தில் அதிகாரங்கள் பகிரப்படவில்லை. இலங்கை ஒற்றையாட்சி நாடாகும். இங்கு சமஷ்டிக்கு இடமே இல்லை. ஆனால் தமிழ் மக்கள் சமஷ்டி என்பதே ஒரே தீர்வு என்கிறார்கள். இதற்காகவே பல தியாகங்களை செய்து இருக்கிறார்கள்.

தற்போது நாட்டில் அதிகாரமற்ற மாகாண சபை முறை ஒன்றே காணப்படுகிறது. தமிழ் மக்களின் நியாயமான எதிர்பார்ப்பு சமஷ்டி முறையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களுடைய எதிர்பார்ப்பாகும். இருப்பினும் தற்போது உள்ள நிலையில் அதற்கு சாத்தியமில்லை. இன்று நாட்டில் 13ஆவது திருத்தத்திற்கு நாட்டில் பாரியதொரு எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் சமஷ்டி என்பது சாத்தியமில்லாத ஒன்றாகும் என்றார்.

## இந்தியாவுக்கு தார்மீக உரிமை கிடையாது



13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்க இந்தியாவுக்கு தார்மீக உரிமை கிடையாது என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். இந்தியாவின் மேற்பார்வையுடனான விசேட பொறிமுறையை உருவாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவ தானம் செலுத்தியுள்ளார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு இந்தியா பலவந்தமான முறையில் 13 ஆவது திருத்தத்தை இலங்கைக்கு அமுல்படுத்தியது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.


வடக்கு கிழக்கு மக்களை முன்னிலைப்படுத்தி அரசியல் செய்யும் தமிழ் தலைவர்கள், அடிப்படை பிரச்சினைகளுக்கு(22ம் பக்கம் பார்க்க)




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்
கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

17. பெப்ரவரி 2023 வெள்ளிக்கிழமை:– பிரதோஷ விரதம்.

18 பெப்ரவரி 2023 சனிக்கிழமை மகா சிவராத்திரி விரதம்.

முதல் ஜாமம்.– இரவு 6 மணிக்கு பூஜை உபயம்: லிங்கராஜா மீரா குடும்பம்

இரண்டாவது ஜாமம்.– இரவு 9 மணிக்கு பூஜை உபயம்: அருள் சுபா குடும்பம்

மூன்றாவது ஜாமம். நள்ளிரவு. 12 மணிக்கு பூஜை உபயம்: கிருபா. மதுரா குடும்பம்

நான்காவது ஜாமம். அதிகாலை 3 மணிக்கு பூஜை உபயம்: இளையபெருமாள் குடும்பம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# ரொறன்ரோ நகர முதல்வர் பதவி துறப்பும் ஈழத்தமிழரும்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு

*Toronto* நகர முதல்வர் *John Tory* திடீரென தனது பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தது நாடளாவிய ரீதியில் பெரும் அதிர்வலைகளை தொடர்ந்தும் ஏற்படுத்தி வருகிறது. நகர முதல்வர் பதவியில் இருந்து *John Tory* யின் வெளியேற்றம் *Toronto* நகருக்கு ஒரு சோகமான நிகழ்வு. இந்த பதவி விலகலுக்கு காரணம் ஒரு ஈழத் தமிழ் பெண் என்ற வதந்தி கடந்த சில நாட்களாகவே பரவி வருகிறது.

இது வெறும் வதந்தியே!

எந்தவித முகாந்தரமும் இல்லாமல் வெறும் ஊகங்களின் அடிப்படையில் இந்த வதந்தி உருவாக்கப்பட்டு உலாவருகிறது. இது வெறும் வதந்தி என்பது பொது வெளியில் பகிரங்கமாக பதவி செய்யப்பட வேண்டும் என்பதே இந்த பத்தியின் பிரதான நோக்கம்.

*Toronto* நகர முதல்வர் அலுவலம் உட்பட இந்த விடயத்துடன் தொடர்புடைய பலருடனும் வார விடுமுறையில் பல்வேறு தரங்களில் பேசியதிலும், இணையப் பரப்பில் பொதுவாக தேடிக் கிடைக்கக் கூடிய தகவல்களின் அடிப்படையிலும் முடிவுக்கு வரக்கூடிய விடயம் இதுவாகும்.

இது போன்ற வதந்திகளை ஆரம்பத்திலேயே மறுதலிக்க வேண்டியது ஒரு சமூகத்தின் கடப்பாடாகும். தனி நபர்களை தாண்டி ஊடகங்கள், சமுக தலைவர்கள், அமைப்புகள் இது போன்ற அடிப்படையற்ற வதந்திகளை கடுந் தொனியில் மறுக்க வேண்டியதும் மறுதலிக்க வேண்டியதும் அவசியம்.

அது போன்ற வெளிப்படையான மறுப்பை அல்லது கண்டனத்தை வெளியிடும் நிலையில் கனடாவில் உள்ள தமிழர் அமைப்புகள் இல்லை என்பது துரதிருஷ்டவசமானது. அவர்களின் கடந்த கால தவறுகள் பல இன்று இந்த விடயத்தில் உறுதியான ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியாத நிலைக்கு தள்ளி விட்டுள்ளது.

கனடாவில் தமிழர்கள் பலரும் அண்மைக் காலங்களில் பல்வேறு அரசியல் பதவிகளில் தம்மை நிலை நிறுத்தி வருகின்றனர். குறிப்பாக கனடாவில் பிறந்து கல்வி கற்ற ஈழத்தமிழரின் இரண்டாம் தலைமுறையினர் பல மட்டங்களிலும் அரசியல் பதவிகளில் உள்ளனர். இவற்



றில் பல, கட்சிகள் சார்பிலும், அரசாங்கத்தின் சார்பிலும் முக்கிய முடிவுகளை எடுக்கும் பதவிகளாகும்.

ஒரு நகர, மாகாண சபை, நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலக உதவியாளர் முதல் அரசாங்கத்தின் மிக முக்கிய கொள்கை ஆலோசகர்கள் வரை தமிழர்கள் தம்மை நிலை நிறுத்தியுள்ளனர்.

இது போன்ற முக்கிய முடிவுகளை எடுக்கும் நிலையில் உள்ள பல தமிழர்களையும் எமது சமூகத்திடமிருந்து விலகி நிற்கச் செய்யும் அபாயத்தை இது போன்ற அடிப்படையற்ற வதந்திகள் இலகுவாக உருவாகி விடும்.

*John Tory* பதவி விலகல் விடயத்தில் தொடர்புபட்டவர் யார் என அறிந்த பெரு நீரோடத்தின் முக்கிய ஊடகங்களே அவரது பெயரை நெறிமுறை ஊடக பண்பாட்டுக்கு அமைவாக வெளியிடாத நிலையில் எந்தவித அடிப்படையும் இல்லாத ஒருவரின் பெயரை களங்கப்படுத்துவதாக எண்ணி ஒரு முழு சமூகத்தின் வளர்ச்சியையும் கேள்விக்குள்ளாக்கும் இது போன்ற நகர்வுகளுக்கு கடுமையான கண்டனத்தை பகிரங்கமாக பதிவு செய்கிறோம்.

நன்றி:- தேசியம் இலங்கதாஸ் பத்மநாதன்

# பி.ஜே.பியின் கவனத்திற்கு!

இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுக்கான தலைவர் அண்ணாமலை மீளவும் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கிறார். அண்ணமையில், அண்ணாமலை தலைமையிலான தமிழ்நாட்டு பி. ஜே. பி. தலைவர்கள் இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்தித்து இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தனர்.

அண்மைக் காலமாக 13ஆவது திருத்தச் சட்டம் மீளவும் கொழும்பு அரசியலில் பேசு பொருளாகியிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் தான் அண்ணாமலை மேற்படி வேண்டுகோளை விடுத்திருந்தார். ஆனால் தென்னிலங்கையின் சிங்கள பௌத்த கடும் போக்கு தரப்பினர் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தக்கூடாது.அதனை தாம் விடப் போவதில்லை என்னும் கோஷங்களுடன் வீதிக்கு வந்திருக்கின்றனர். முக்கியமாக பௌத்த பிக்குகள் 13ஆவது திருத்தச்சட்டத்தின் நகலை எதிர்த்து எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

மாகாணசபை முறைமையினால் ஆளுநராகியிருக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் கூட 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்த்துப் பேசும் அவலத்தை காண்கின்றோம். ஆளும் பி. ஜே. பி. மீளவும் ஆட்சியை தக்க வைப்பதற்கான தீவிரமுயற்சிகளில் இறங்கியிருக்கின்றது. இதேவேளை பி. ஜே. பி. ஆட்சியை வீழ்த்தும் நோக்குடன் காங்கிரஸ் தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ்நாட்டில் பி. ஜே.பியின் செல்வாக்கை தூக்கி நிறுத்தும் முயற்சிகளில் அண்ணாமலை ஈடுபட்டு வருகின்றார். பி. ஜே. பியின் தமிழ்நாட்டு நடவடிக்கைகளை அண்ணாமலை பொறுப்பேற்றதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பி. ஜே.பியின் செல்வாக்கு அதிகரித்து வருவதாகவும் ஓர் அபிப்பிராயமுண்டு.

அண்ணாமலை, குறுகிய காலத்தில் தமிழ்நாட்டில் செல்வாக்குமிக்க தலைவராக வளர்ந்திருக்கின்றார். தமிழ்நாட்டின் அரசியல் எப்போதுமே பி. ஜே. பிக்கு சிம்ம சொப்பனமாகும். பி. ஜே. பியால் இதுவரையில் தமிழ்நாட்டில் வலுவாகக் காலூன்றவே முடியவில்லை. இதற்காக அண்ணாமலை கடுமையாக உழைக்க வேண்டியிருக்கின்றது.

வரலாற்று ரீதியாக பி. ஜே. பி. எதிர்ப்பு திராவிட கட்சிகளும் மத்திய அரசை விமர்சிக்கும் தமிழ்நாட்டு தமிழ்த் தேசிய குழுக்களுமே ஈழத்தமிழர்களுக்கான ஆதரவாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றனர். இப்போது, முதன்முதலாக ஈழத் தமிழர்களுக்கான ஆதரவு சக்தியாக தமிழ்நாட்டு பி. ஜே. பியும் முன்னரங்குக்கு வந்திருக்கின்றது.

இலங்கையின் பௌத்தத்தோடு இணைந்து பயணிக்கலாம் என்னும் பார்வை இந்துத்துவா சக்திகளிடம் உண்டு. அது சரியான பார்வைதானா?

ஏனெனில், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான 13ஆவது திருத்தச் சட்டத்தை தீயிட்டுக் கொழுத்துவது என்பது அடிப்படையில் இந்திய நலன்களை தீயிட்டுக் கொழுத்துவது தான். இந்த விடயத்தை தமிழ்நாட்டு பி.ஜே.பியினர் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

பிக்குகளைப் பகைத்துக் கொள்ளாமல் விடயங்களை கையாள முடியுமென்பது தென்னிலங்கை அரசியலில் ஒருபோதுமே சாத்தியப்படாது.

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் பி. ஜே. பியின் அணுகுமுறை வெறும் உதட்டு அசைவுடன் முடிந்து விடக்கூடாது. அதனை அமுல்படுத்தும் விடயத்தில் முன்னேற்றங்களை காண முடியாவிட்டால், அது மோடி அரசாங்கத் தின் இலங்கை தொடர்பான அயலுறவு அணுகுமுறையின் தோல்வியாகவே வரலாற்றில் பதிவாகும்.

# 13தொடர்பில் நல்ல செய்தி வெகுவிரைவில் வெளியாகும்! தமிழ்நாடு பாரதியஜனதா கட்சித் தலைவர் அண்ணாமலை



இலங்கையில் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பல நல்ல செய்திகள் விரைவில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், 13 ஆவது சட்டத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை ஜனாதிபதியை தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய பிரதமரின் தனிப்பட்ட ஆர்வத்துடன் கூடிய பொறுப்பான திட்டமிடலால் மட்டுமே, இலங்கையில் வாழும் தமிழர்களின் நலன் பாதுகாக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த திட்டங்கள் காரணமாக பிராந்தியத்தில் வலுவாக நிலவியிருந்த சீன ஆதிக்கம் வெகுவாக அடங்கிப் போயுள்ளதாகவும் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட நெருக்கடி அனைத்தையும் சீராக்கி, நல்லிணக்கத்தை உருவாக்க இந்திய பிரதமர் நரேந்திர மோடி பல்வேறு அமைதி நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### அண்ணாமலையிடம் கோரிக்கை

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்கு உடனடியாக சந்தர்ப்பமொன்றை ஏற்படுத்துமாறு இந்திய மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் மற்றும் தமிழக பா.ஜ.க.தலைவர் அண்ணாமலை ஆகியோரிடத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ஈ.பி.ஆர். எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரே மேற்படி கோரிக்கை விடுத்ததுடன் 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அமுலாக்குவதற்கு இந்தியாவின் மேற்பார்வையுடன் பொறிமுறையொன்றை உருவாக்குமாறும் பரிந்துரைத்துள்ளனர். சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகையில், 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுலாக்க வேண்டும் என்பது இந்தியாவின் நீண்ட காலக் கோரிக்கையாக உள்ளது. ஆனால் தற்போது இலங்கையில் அதற்கு எதிரான போராட்டங்கள் வலுவடைந்து வருகின்றன என்றார்.

# பாதுகாப்பு பேச்சுவார்த்தைகளுக்காக அமெரிக்கக் குழு இலங்கை விஜயம்

இலங்கையுடன் பாதுகாப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்காக அமெரிக்காவின் 20 பேர் அடங்கிய குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது. அமெரிக்க குழுவினர் கொழும்பு விமானநிலையத்தை சென்றடைந்துள்ளனர். இந்தோ பசுபிக்கின் பாதுகாப்பிற்கான அமெரிக்காவின் முக்கிய அதிகாரியொருவர் இந்த குழுவில் இடம் பெற்றுள்ளார்.

அமெரிக்க குழுவினரின் விஜயத்தை முன்னிட்டு கொழும்பு விமானநிலையத்திலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. போயிங் சி-17 குளோப்மாஸ்டர் என்ற விமானத்தில் அமெரிக்க குழுவினர் இலங்கை



சென்றுள்ளனர். உயர்மட்ட பேச்சு வார்த்தைகளிற்காகவே இந்த விஜயம் இடம் பெறுவதாக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# தலைவர் உயிருடன் இருக்கின்றார் என்பது படையினரின் கெடுபிடிக்கு பொதுமக்கள் உள்ளாகலாம் - அருட்தந்தை மா.சக்திவேல்

தலைவர் உயிருடன் இருக்கின்றார் என்ற கூற்று படையினரின் கெடுபிடிக்கு பொதுமக்கள் உள்ளாகலாம் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.



அவரால் நேற்று (16) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

`தமிழ் ஈழத்தேசிய தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் உயிருடன் இருக்கின்றார்' என பழ நெடுமாறன் அவர்கள் பற்ற வைத்த அரசியல் தீ அவர் எதிர் பார்த்ததை விட அவர் நினைத்ததை விட அனைத்து திசைகளிலும் காட்டுத் தீ போல் பரவிக் கொண்டிருக்கின்றது. கொல்லப்பட்டவர் என்று கூறப்படுகின்ற ஒருவர் உயிருடன் இருக்கின்றார் என்பது மகிழ்ச்சியே.

காணாமலாகக்கப்பட்டோரின் உறவுகளும் தம் உறவுகள் மீண்டும் உயிரோடு வரவேண்டும், அவர்களை காண வேண்டும் என்றே போராடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் தலைவர் அவர்கள் உயிருடன் இருக்கின்றார். அவருடைய உறவுகள் எங்களுடன் தொடர்புகள் இருக்கின்றனர். என அரசியல் குளிர்காய நினைப்பவர்கள் நீண்ட காலம் குளிர் முடியாது என்பது மட்டும் உண்மை.

இக்கூற்றினைத் தொடர்ந்து ஜனநாயக வழியில் கொள்கை அரசியல் செய்பவர்களும், அவர்களின் ஆதரவாளர்களும் குறி வைக்கப்படலாம். மேலும் படை முகாம்கள் பலப்படுத்தப்படலாம். படையினரின் கெடுபிடிக்கு பொதுமக்கள் உள்ளாகலாம், எதிர்ப்பு போராட்டம் தமிழர் பகுதிகளில் விரிவடையலாம், இத்தகைய சூழ்நிலையை விரும்புகின்றவர்களும் இன அழிப்பார்களே. தமிழ் ஈழத்தலைவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பதை அறிவது இந்திய, இலங்கை புலனாய்வாளர்களின் வேலை.அவ்வாறு இருந்தால் இந்திய அரசு அவருக்கு கொடுக்கின்ற அதி உயர் கௌரவமாக அரசியல் கைதி நிலையிலிருந்து விடுவித்து விடுதலைப் புலிகளின் தலைமையகத்தை பழ நெடுமாறன் பாதுகாப்பு படையுடன் ஆதரவுடன் தமிழகத்தின் தென்கோடியில் வைத்திருக்க இடம் கொடுக்குமா?

விடுதலைப்புலிகள் தலைவரின் மூச்சுக் காற்றினை எவராலும் தடுக்கவோ, அழிக்கவோ, கொலை செய்யவோ முடியாது. தியாகிகளின் வரலாறும் அவ்வாறே என்பது மட்டும் வரலாற்று உண்மை.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் புலம்பெயர் தேசத்தில் அவர்களின் மூச்சு காற்றின் வேகத்தில் தான் தமிழர்களின் அரசியல் இன்றும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதுவே சர்வதேசத்தின் அரசியல் நீதி கதவை தட்டிக் கொண்டும் இருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் பின்னரும் நடைபெறுகின்ற முள்ளிவாய்க்கால் ஈகை சுடரேற்றும் தினம், மாவீரர் வாரம் என்பவற்றிலும் ஆயிரக் கணக்கில் தமிழ் மக்கள் ஒன்று கூடுகின்றார்களே அவர்களை உந்தித் தள்ளுகிக்கின்ற சக்தி எது? 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த அதே அரசியல் சக்தி மேலோங்கி மக்களை திரளவைப்பதை காணலாம். அங்கு எழுகின்ற மக்கள் குரல் சர்வ தேசத்தின் காதுகளுக்கு எட்டவில்லை.

சர்வதேச நீதி செயல்பாட்டாளர்களின் காதுகளை திறக்கவும், தமிழர்களின் அரசியல் கோரிக்கைளுக்கு கதவை திறக்கவும் வழி செய்யாதவர்கள் தமிழர்களின் இன அழிப்பிற்கு தொடர்ந்தும் துணை போய்க் கொண்டிருப்பவர்கள் தலைவர் தொடர்பில் புதிய கதையை அவிழ்த்து விட்டு இலங்கையில் தனது நலனுக்கான அரசியல்,பொருளாதார பாதுகாப்பு பிடியை தக்கவைக்க நினைக்கின்றார்கள். இதனை இலங்கை அரசுடன் சேர்ந்து இனப்படுகொலை , இன அழிப்பு செய்யும் முன்னால் சிந்தித்திருக்க வேண்டும். காலம் கடந்த ஞானம் சுடுகாட்டு ஞானமே என மேலும் தெரிவித்தார்.

# ஐ.நா.வைத் தலையிடுமாறு கோரும் தென்னிலங்கை சிங்களக்கட்சி!

இலங்கை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் விடயத்தில் தலையிடுமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள அரசியலமைப்புக்கு முரணான முயற்சிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தில் ஐக்கிய மக்கள் சக்தி முறைப்பாடு செய்துள்ளது. இந்த முறைப்பாட்டிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவிக்கையில் ,இலங்கையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும். அதற்கு முன்னர் புதிய சபைகள் நிறுவப்பட வேண்டும். உள்ளூராட்சிமன்றங்களுக்கான வேட்புமனு தாக்கல் செய்ய தேர்தல் ஆணைக் குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டதோடு , மார்ச் 9 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.

வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் தேர்தலில் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு இலங்கை மக்கள் மத்தியில் உற்சாகம் காணப்படுகிறது. எவ்வாறாயினும், தேர்தல் தொடர்பான பொதுக் கருத்துக் கணிப்புக்கள் அரசாங்கத்திற்கு மிகவும் பாதகமானவை என்பதை உணர்ந்து, நிதியமைச்சராக இருக்கும் ஜனாதிபதி சில சுற்றறிக்கைகளை வெளியிட்டு, அமைச்சரவை சில தீர்மானங்களை எடுத்துள்ளது. இலங்கை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலும், அரசியலமைப்பின் (22ம் பக்கம் பார்க்க)


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students

Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.

Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை

பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# இலங்கையின் 75வது சுதந்திர தினம்:- வடக்கு கிழக்கில் எதிர்ப்புப் போராட்டம் எப்படி இருந்தது?

சிவாஜிலிங்கம் தனது ஆதங்க ஆவேசத்தை வெளிப்படுத்துகிறார். இது அவரது உரிமை.அவரது ஆவேச கோரிக்கைகள் தமிழ் மக்களின் ஆவேச கோரிக்கைகள்தான். எனக்கு அதில் மாற்று கருத்து தெரியலை. ஆனால் இவர் இப்படி தன்னந்தனி மனிதராக இதை செய்யும் போது, அவர் முன்வைக்கும் கோஷங்களும் பலவீனமடைகின்றனவே? தவிர்க்க முடியாமல் ஒரு கோமாளி தோற்றப்பாடும் ஏற்படுகிறதே? இவற்றை இன்னமும் கட்சி, இயக்க ரீதியாக பலமாக திட்டமிட்டு அமைப்பு ரீதியாக செய்ய முடியாதா?

இவ்வாறு கேட்டிருப்பவர் மனோ கணேசன். சுதந்திர தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வில் பங்கு பற்றுவதற்காக வருகை தந்த ஜனாதிபதிக்கு எதிராக சிவாஜிலிங்கமும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்களும் எதிர்ப்புக் காட்டியிருந்தார்கள். இதில் சிவாஜி லிங்கம் தனி ஒரு ஆளாக நின்று கோஷம் எழுப்பும் காணொளியை பார்த்து விட்டு மனோகணேசன் மேற்கண்டவாறு கேட்டார்.

இயல்பிலேயே சிவாஜிலிங்கம் ஒரு தனிமனித இராணுவந் தான். நினைவேந்தலிலும் அவர் அப்படித் தான், எதிர்ப்புப் போராட்டங்களிலும் அப்படித் தான். பெரும்பாலான அவருடைய துணிச்சலான அரசியல் செயற்பாடுகளில் அவர் தனியாகத்தான் முன் செல்கிறார். அதை ஒரு குழுச் செயல்பாடாகவோ, அல்லது கட்சிச் செயற்பாடாகவோ, அல்லது மக்கள் மயப்பட்ட ஒரு செயற்பாடாகவோ ஒழுங்குபடுத்த வேண்டும் என்று அவர் யோசிப்பதில்லை.சில சமயம் அவ்வாறு மற்றவர்களைக் கூட்டுச் சேர்ப்பது கடினமானது என்று அவர் கருதுகிறாரா?

ஆனால் எதிர்ப்பைக் காட்டும் போது அதை ஏதோ ஒரு விதத்தில் உலகத்தையும் ஊடகங்களையும் கவரும் விதத்தில் படைப்புத் திறனோடும், புத்திசாலித்தனமாகவும் ஒழுங்கமைக்க வேண்டும். ஆனால் தமிழ் அரசியல் பரப்பில் அவ்வாறு அரசியல் எதிர்ப்புப் போராட்டங்களில் படைப்புத் திறனோடு கூடிய கூட்டுச் செயற்பாடுகளை அனேகமாக காணமுடிவதில்லை.

அவ்வாறு மக்கள் மயப்படாத போராட்டங்கள் உரிய செய்தியை, உரிய தாக்கத்தோடு, உரிய தரப்புகளுக்கு உணர்த்தத் தவறுகின்றன. யாழ்ப்பாணத்தின் முக்கிய சந்தைகளில் வெள்ளை உடுப்போடு ஒரு ஸ்பீக்கரை கையில் வைத்துக் கொண்டு மத போதனையை முன்னெடுக்கும் ஒருவரை பெரும்பாலானவர்கள் கண்டிருக்கிறோம். அது அவருடைய நம்பிக்கை. ஆனால், அதைப் போல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் செயற்பட முடியாது.

சுதந்திர தினத்திலன்று பல்கலைக்கழக மாணவர்கள் வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி ஊர்வலமாக போனார்கள். அதில் உதிரிகளாக கட்சி பிரமுகர்கள் காணப்பட்டார்கள். சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாளர்களோடு கலந்து கொண்டார்கள். முன்பு நடந்த பி2பி போராட்டத்தைப் போல பெருந்திரளான எண்ணிக்கையில் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதில் பங்குபற்றவில்லை.

அதாவது அந்த எதிர்ப்பு பேரணியில் கட்சிகளின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் குறைவாக காணப்பட்டது.ஏன் அதிகம் போவான் அதில் பங்கு பற்றிய பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கையே நூற்றுக்கும் குறைவு. மாணவர்களின் போராட்டம் தொடங்கமுன்பே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் மாணவர்களுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் தோன்றின. மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டத்தை தொடங்கிய பொழுது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனியாக ஒரு போராட்டத்தை நடத்தியது. அதே நாளில் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி தனியாக ஒரு போராட்டத்தை நடத்தியது. அப்போராட்டமானது அரசாங்கத்துக்கு எதிரானது மட்டுமல்ல, குறிப்பாக குத்து விளக்கு சின்னத்தின் கீழ் காணப்படும் டெலோ இயக்கத்துக்கும் எதிரானது.



இவ்வாறாக சுதந்திர தினத்தையொட்டி நடந்த போராட்டங்களை தொகுத்துப் பார்த்தால் தமிழ்மக்கள் கூட்டாகவும் செயல்பட மாட்டார்களா? படைப்புத் திறனோடு போராடவும் மாட்டார்களா? என்று கேட்கத் தோன்றுகிறது. மட்டக்களப்பில், சுமந்திரனும் சாணக்கியனும் அவர்களுடைய ஆதரவாளர்களும் காந்தி குல்லாயோடு காட்சியளித்தமை ஒரு படைப்புத்திறனாகப் பார்க்கப்படவில்லை. மாறாக அது ஒரு பகிடியாகப் பார்க்கப்பட்டது.

இவ்வாறாக கடந்த சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழ்ப் பகுதிகளில் நடந்த போராட்டங்கள் அனைத்திலும் கூட்டுச் செயற்பாடு குறைவாக இருந்தது. தனிமனித முனைப்பு அல்லது கட்சி முனைப்பு துருத்திக் கொண்டு தெரிந்தது. படைப்புத்திறன் இருக்கவில்லை. பழைய சலித்த அதே போராட்ட வழி முறைகள். போலீசார் கைது செய்தபடியால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டத்திற்கு ஒரு கவனிப்பு கிடைத்தது. அதுவும் பிணை கிடைத்தவுடன் கொதிப்பு அடங்கி விட்டது.

இவ்வாறு உலகின் கவனத்தை ஈர்க்க முடியாத போராட்டங்களால் ஒரே ஒரு நன்மை உண்டு.குறிப்பிட்ட கட்சியின் ஆதரவாளர்களை ஓரளவுக்கு கூட்டிக் கட்டி வைத்திருக்க அது உதவும். ஆனால் அதைவிட ஆழமான பொருளில் தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்ட மேற்படி போராட்டங்களால் முடிந்திருக்கிறதா?

புலம் பெயர்ந்து வாழும் ஒரு நண்பர் அண்மையில் கேட்டார் போராட்டம் என்று சொன்னால் தமிழ் மக்கள் எப்பொழுதும் வீதியிலே நிற்க வேண்டுமா? ஒரு மக்கள் கூட்டம் ஆண்டு முழுவதும் எதிர்ப்பு போராட்டங்களையும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடத்திக் கொண்டிருக்க முடியுமா?'' என்று.பொருத்தமான கேள்வி.

ஓர் உடனடிக் பிரச்சினையை முன் வைத்து நிகழும் மக்கள் போராட்டங்கள் அவற்றின் இலக்கை அடையும்வரை தொடர்வது தவிர்க்க முடியாது. உதாரணமாக டெல்லியில் நடந்த விவசாயிகளின் போராட்டம். ஆனால் ஒரு மக்கள் கூட்டத்தின் விடுதலைக்கான ஒரு போராட்டத்தை பொறுத்தவரை குறிப்பாக அறவழிப் போராட்டம் என்று வரும்பொழுது ஆண்டு முழுக்க போராட முடியாது தான்.

ஏன் அதிகம் போவான் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எத்தனை நாள் போராடியிருக்கிறார்கள் என்பது இடைக்கிடை ஊடகங்களில் வெளிவரும். ஆனால் அப்போராட்டங்கள் எந்தளவு தூரத்துக்கு உலகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன? அல்லது எந்த அளவுக்கு சொந்த மக்களை சென்றடைந்திருக்கின்றன?

ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல அறவழிப் போராட்டத்திலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை போராட்டம் எனப்படுவது இறுதியிலும் இறுதியாக தேசத்தை நிர்மாணிப்பதுதான். தேசத்தை நிர்மாணிப்பது என்பது ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாக வனையும் அடிப்படை மூலக்கூறுகளை பலப்படுத்துவது தான். அதற்குரிய கட்டமைப்புகளை உருவாக்குவது தான். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கருநிலை அரசு இருந்தது. அது தேச நிர்மாணத்துக்கு வேண்டிய கட்டுமானங்களை ஏதோ ஒரு விகிதமளவுக்கு கட்டியெழுப்பிக் கொண்டிருந்தது. ஆனால் கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறு தேசநிர்மாணத்துக்கு தேவையான கட்டமைப்புகள் எவையும் கட்டி எழுப்பப்படவில்லை. பதிலாக அவ்வப்போது காட்டப்படும் சிறிய மற்றும் பெரிய எதிர்ப்புகளுக்கூடாக கட்சிகளைத் தான் கட்டியெழுப்பி வருகிறார்கள்.

எனவே தமிழ் மக்கள் போராட்டம் என்பதனை தனிய எதிர்ப்பு அரசியலாக மட்டும் சுருக்கி பார்க்காமல் அதைவிட பரந்தகன்ற அர்த்தத்தில் அதை தேச நிர்மாணமாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாகத் திரட்டும் அடிப்படை அம்சங்களைப் பலப்படுத்தும் விதத்தில் உரிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அவ்வாறான கட்டமைப்புகளில் ஒன்றாக போராட்டத்திற்கான மக்கள் அமைப்பும் கட்டி எழுப்பப்பட வேண்டும்

தமிழ் கட்சிகளில் பெரும்பாலானவற்றிடம் மாணவ அமைப்புகள் இல்லை. யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள சிங்கள மாணவர்கள் மத்தியில் தென்னிலங்கையில் இயங்கும் ஜேவிபி போன்ற கட்சிகளுக்கு உறுப்பினர்கள் உண்டு. சிறிய அளவில் கட்டமைப்புகளும் உண்டு. ஆனால் போராடும் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான கட்டமைப்புகள் கிடையாது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் அவ்வாறு மாணவர் போராடடத்திற்கூடாக மேலெழுந்த ஒருவர். ஆனால் அக்கட்சியிடமும் பலமான மாணவ அமைப்புக்கள் கிடையாது, அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லாத ஒரு வெற்றிடத்தில் தான், பல்கலைக்கழக மாணவர்களின் ஊர்வலத்தைப் பலப்படுத்தி பிரம்மாண்டமானதாக கட்டமைக்க வேண்டும் என்ற அக்கறை கட்சிகளிடம் இருக்கவில்லை மாணவர்களிடமும் இருக்கவில்லை

தமிழகத்தில் உள்ள கட்சிகள் எல்லாவற்றுக்கும் மாணவ அமைப்புகள், மகளிர் அமைப்புகள் என்று வெவ்வேறு வயது மட்டங்களுக்கு ஏற்ப கட்டமைப்புகள் உண்டு. குறிப்பாக கேரளா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் கொமியூனிஸ்ற் கட்சிக்கு இளையோர் மத்தியில் மூன்றுக்கும் குறையாத கட்டமைப்புகள் உண்டு. பள்ளி மாணவருக்கு ஒரு கட்டமைப்பு, பல்கலைக்கழக மாணவருக்கு ஒரு கட்டமைப்பு, மாணவப் பருவத்தைக் கடந்தவர்களுக்கு ஒரு கட்டமைப்பு, என்றெல்லாம் கட்டமைப்புகள் உண்டு. ஆனால் தமிழ் கட்சிகளுக்கு அப்படியெல்லாம் கட்டமைப்புகள் இல்லை. ஆனால் ரோட்டரிக் கிளப் போன்றவற்றுக்கு அப்படிப்பட்ட கட்டமைப்புகள் உண்டு.

இப்பொழுது உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான அறிவிப்புகள் வந்தபின் பெண் வேட்பாளர்களை தேடி கட்சிகள் ஓடத் தொடங்கி விட்டன கிராம மட்ட மகளிர் அமைப்புகள் பலமாக இருந்தால் அதற்குள் இருந்தே (20ம் பக்கம் பார்க்க)

ANALAITIVU IYANAR TEMPLE OF CANADA

கனடிய அனலைதீவு ஐயனார் ஆலயம்

13-22 Goodmark Place- Etobicoke- ON M9W 6R2
Tel: 416 679 9899

கனடிய அனலைதீவு ஐயனார் ஆலய
அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்ட அறிவித்தல்

திகதி:-Sunday March 5, 2023

நேரம்:-1:00 Pm

இடம்:- ஆலய மண்டபம்

அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி -ஆலய அறங்காவல் சபையினர்

# அரசியலமைப்பில் இருக்கும் விடயங்களை நிறைவேற்றுவது நிறைவேற்று ஜனாதிபதி என்ற வகையில் ரணிலுக்கு உண்டு!





நிறைவேற்று ஜனாதிபதி என்றவகையில் அரசியலமைப்பில் இருக்கும் விடயங்களை நிறைவேற்ற வேண்டும். அது அவரின் பொறுப்பு. பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகார பரவலாக்கத்தை கோருவதை ஏன் பெரியவிடயமாக அலட்டிக் கொள்ள வேண்டும் என கேட்கின்றேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த10 பெப் 2023 வெள்ளிக்கிழமை இரண்டாவது தினமாக இடம் பெற்ற ஜனாதிபதியின் அரச கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.அவர் அங்கு மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க கொள்கை விளக்க உரையாற்றும் போது நாட்டில் அனைத்து பிரதேசங்களிலும் தொழிற் சங்கங்களின் போராட்டம் இடம்பெற்றிருந்தன.

வரி அதிகரிப்புக்கு எதிராகவே இந்த போராட்டம் இடம்பெற்றது. இதனை உணர்ந்து வரியின் தேவை தொடர்பில் தெளிவுடுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அதனை செய்யவில்லை. அத்துடன் ஜனாதிபதி உரையாற்றிக் கொண்டிருக்கும் போது வரலாற்றை மீண்டும் திருப்பும் வகையில் ஆயிரக்கணக்கான பௌத்த தேரர்கள் ஊர்வலமாக வந்து, நாட்டின் அரசியலமைப்பை தீயிட்டார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் சபையில் உரையாற்றும் போது அவரின் உரையில் விரக்தியை காண முடிந்தது. அவரின் தந்தை தர்மலிங்கம் வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தியவர். அவர் ஆயுததாரிகளால் கொலை செய்யப்பட்டார். சித்தார்த்தன் ஆயுதம் ஏந்தியவர் தான். ஆனால் அதிகார பரவலாக்கத்திட்டம் நிறைவேற்றப்படும் என்ற அபிலாசையில் ஆயுதத்தை கைவிட்டார். ஆனால் இங்கே சுதந்திர தினத்தில் இருந்த விடயங்கள் மீண்டும் இடம் பெற்று வருவதை காண்கிறோம். முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ , ஆர்.டி. பண்டாரநாயக்க அதிகார பரவலாக்கலுக்கு நடவடிக்கை எடுத்த போது அவரை கொலை செய்ததும் பௌத்த பிக்கு ஒருவராகும். எவ்வாறு இதனை மறக்கலாம்.

கடந்தகால வரலாறுகள் மீண்டும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றதை காணக் கூடியதாக இருக்கிறது. எனவே நாங்கள் கேட்டுக் கொள்வது என்னவென்றால், நிறைவேற்று ஜனாதிபதி என்ற வகையில் ஜனாதிபதி அரசியல் அமைப்பில் இருப்பதை நிறைவேற்ற வேண்டும். அது அவரின் பொறுப்பாகும். அத்துடன் பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகார பரவலாக்கத்தையே கோருவதாக சுமந்திரன் எம்.பியும் இங்கு தெரிவித்திருந்தார். அப்படியாயின் ஏன் (22ம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்தியா துரிதமாக செயற்பட வேண்டும் -இந்துமாமன்றம் கோரிக்கை!

இந்திய இணை அமைச்சர் முருகன் மற்றும் இந்திய பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை ஆகியோர் நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கின்ற போது விடுவிக்கப்படாத காணிகள், தீர்க்கப்படாத தமிழர்களின் பிரச்சினைகளை இந்திய பிரதமருக்கு தெளிவுபடுத்த வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 10பெப் 2023 வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவர் ஆறுதிருமுருகன் இந்த வேண்டுகோளை விடுத்தார். மேலும் தெரிவிக்கையில், நீண்டகாலமாக தீர்க்கப்படாத தமிழர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்தியா துரிதமாக செயற்பட வேண்டும்.

இருநூறு வருடங்கள் இலங்கை பொருளாதாரத்துக்கு உழைத்த மலையக மக்களுக்கு ஒரு துண்டு காணியில்லை.அவர்கள் தற்போதும் அடிமை வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றனர். அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இந்தியா உதவ வேண்டும். இந்துக்களின் புனித ஆலயமான திருக்கோணேச்சரம் இலங்கைக் கடற்படை ,தொல்லியல் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகிறது. நீண்டகாலமாக செய்யப்படாத திருக்கோணேச்சரத்தின் திருப்பணியை இந்தியா செய்ய வேண்டும்.

திருக்கோணேச்சர ஆலயம் அருகே பெட்டிக்கடை போட்டு நிரந்தர கட்டடம் அமைக்க முயற்சிக்கப்படுகிறது. இலங்கை ஜனாதிபதி, இந்திய பிரதமர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பிய போதும் நிரந்தர தீர்வு எட்டப்படவில்லை. இது தொடர்பாகவும் இந்தியா கரிசனை செலுத்த வேண்டும் என்றார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# விடுதலைப் புலிகளின் தலைவரின் மீள் வரவு பற்றிய பித்தலாட்டத்தின் பின்னால் உள்ள அரசியல்!

தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் தவிர்த்து இலங்கை இந்திய அரசியல் ஒரு சாண் கூட நகராது என்பதற்கு அண்மைய பரபரப்புக்கள் உதாரணமாகும்.

14 பெப் 2023 செவ்வாய்க்கிழமை தமிழக அரசியல் தலைவர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட குழுவினர் திடீரென ஏற்பாடு செய்த ஊடகச் சந்திப்பில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் நலமாக இருக்கிறார் எனச் சொன்ன கருத்து தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

புலிகள், பிரபாகரன் யார்? தமிழீழ விடுதலைப் புலிகளும், அதன் தலைவர் பிரபாகரன் அவர்களும் தம் போராட்ட வாழ்க்கையின் ஊடாக விட்டுச் சென்ற செய்தி கனதியானது. அவர்கள் செய்த தியாகங்கள் அளப்பரியது.

முப்பது வருடங்களுக்கு முன்னர் என்ன கொள்கைகளை முன்வைத்து ஆயுதம் தூக்கினார்களோ, போர் முடிவின் இறுதிநாள் வரைக்கும் அதே கொள்கையுடன் தான் களத்தில் நின்றார்கள்.

கிடைக்கிற வாய்ப்பைப் பயன்படுத்தித் தன் ஏழேழு தலைமுறைகளுக்கும் சொத்துச் சேர்த்துக் கொண்டு அமெரிக்காவுக்கு ஓடி விடுகின்ற தலைவர்கள் வாழுகின்ற உலகில் பிரபாகரனும், அவர் வழிநடத்திய போராளிகளும் மாத்திரமே உயிர் பிரியும்வரை களத்தில் நின்றார்கள்.

எங்கும் தப்பியோடுவது, ஒழித்து வாழ்வது எல்லாம் அவர்களது வரலாற்றிலேயே இடம் பெற்றிருக்காத சம்பவங்கள். தம் உடல், பொருள், ஆவி, குடும்பத்தினர் என அனைத்தையும் இழந்தனர். பால் மனம் மாறாத பிஞ்சுக் குழந்தையான பிரபாகரனின் மகன் கூட களத்தில் தான் பலியானார்.

அந்தச் சிறு குழந்தையின் மரணத்தைக் கூட, இங்கு நடத்தப்பட்ட மனிதப் படுகொலையின் கோரத்தை உலகிற்கு காட்ட விட்டுச் சென்றனர். மானுடர் யாருமே புரியாத இந்தத் தியாக வேள்வியின் மீது கொண்ட பற்றினால் தான் தமிழ் மக்கள் புலிகள் இயக்கத்தையும், அதன் தலைவர் வே.பிரபாகரன் அவர்களையும் தெய்மாக்கித் தொழுகின்றனர்.

ஈழத்தமிழர்கள் என்ன நினைக்கிறார்கள்? விடுதலைப் புலிகளும், தலைவர் பிரபாகரன் அவர்களும் ஈழத்தமிழர்களுடன் இரண்டறக் கலந்தவர்கள். ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்துப் பார்க்கவோ, பிரித்தெடுத்து அரசியல் செய்யவோ இயலாதவர்கள்.

அதற்கு ஒவ்வொரு வருடமும் பெரும் இராணுவ நெருக்கடிகள் தடைகளுக்கு மத்தியில் ஈழத்தமிழ் மக்கள் சுயமாகத் திரண்டெழுந்து மாவீரர்களுக்கு செய்யும் அஞ்சலி நிகழ்வே சாட்சியாகும். இதனை முன்கூட்டியே ஊகித்த புலிகள், தமிழ் மக்கள்தான் புலிகள், புலிகள்தான் மக்கள் என்றனர்.

தற்போது புலிகளற்ற 13 ஆண்டுகளில் ஈழத்தமிழர்கள் புலிகளையும் அதன் தலைவரையும் இருந்தால் தலைவன் இல்லையேல் இறைவன் என்கின்றனர். ஒரு விடுதலை இயக்கத்திற்கும் அதன் மக்களுக்கும் இவ்வளவு ஆழமான புரிதலுடன் கூடிய உறவு நீடிக்கிற நிலையில் எவ்வித வெளிச்சக்திகளும் அதற்குள் நுழைந்து அரசியல் செய்துவிட முடியாது.

அதையும் மீறி எதாவது செய்ய நினைத்தால் அது ஈழத்தமிழர்களுக்கு மேலும் அழிவை ஏற்படுத்தும் நிகழ்ச்சி நிரலுக்கானதாகவே அது அமையும். அண்மைக் காலமாக ஈழத்தமிழர்களின் போராட்ட வெளி அதிகரித்திருக்கின்றது.

வெளிச்சக்திகளினால் தமக்கு சேவகம் செய்யக்கூடிய அரசியல் வெருளிகளைக் கையாள முடிகின்ற போதிலும், தமிழ் மக்களை எவராலும் கையாள முடியவில்லை.

மூடிய அறைகளுக்குள் ரகசியம் பேசி, தமக்கு நலன் சேர்க்கும் ஏதாவது ஒரு விடயத்தை ஆரம்பித்தால் அதனைத் தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தும்





வகையில் மிகவேகமாக மாற்றியமைத்து விடுகின்றனர்.

நபர்களை, அரசியல் கட்சிகளை, தலைவர்கள், சமூக மட்ட அமைப்புக்களை என அனைத்துத் தரப்பினரையும் கையாண்டு பார்த்தும், தமக்கு இயைபானதொரு மக்கள்கூட்டத்தை ஈழத்தின் வடக்கு, கிழக்கு பாகங்களில் கட்டமைக்க முடியவில்லை. போராடுவதும், உண்மைகளை உடனடியாகவே வெளி சொல்லி அம்பலப்படுத்தி விடுவதும் அவர்தம் உதிரத்தில் கலந்ததாகி விட்டது.

இந்தக் குணத்தின் அடிப்படை எது என்று ஆராய்ந்தால், அது புலிகளிடத்தில் முடிவடைவதைப் பார்க்கலாம். எனவே புலிகள் தலைவர் வே.பிரபாகரன் தொடர்பில் தமிழர்கள் கொண்டிருக்கின்ற பற்றினை சிதைத்தால் மாத்திரமே தமிழ் விரும்புகின்ற மாற்றத்தை தமிழ் மக்கள் மயப்படுத்த முடியும் என்கிற முடிவுக்கு புலிகளுக்கு உயிர் கொடுக்க முனைகின்ற வெளிச்சக்திகள் நம்புகின்றன.

எனவே மக்கள் மத்தியில் அவ்வியக்கத்தின் மீதான அதிருப்தியலைகளை உருவாக்கும் நோக்கில் செயற்படத் தொடங்கியிருக்கின்றன.

அண்மைக் காலமாகவே எல்லாவித அரச ஒடுக்குமுறைகளையும் கடந்து தமிழர்கள் தெருவில் இறங்கிப் போராடத் தொடங்கியிருக்கின்றனர். அரசியல் விடயங்களில் அதிக அறிவு மயப்படுகின்றனர். அடுத்தடுத்த தலைமுறைகள் நோக்கியும் புலிகள் இயக்கம் பற்றிய விடயங்கள் கடத்தப்படுகின்றன. பல்வேறு அழுத்தங்களின் காரணாகத் தமிழ் அரசியல்கைதிகள் விடுதலையாகிக் கொண்டிருக்கின்றனர். எனவே தமிழர்களுக்கு ஏதாவது நன்மைகள் நடந்து விட்டால், அது தமது இருப்பிற்கே ஆபத்தானதாக மாறி விடும் என அஞ்சுகின்ற சக்திகள், புலிகள் மீள வருகிறார்கள் எனக்காட்டி, இலங்கை இராணுவத் தரப்பிற்கு உசுப்பேற்றி விடுகின்றனர்.

மீளவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு உயிர்ப்புட்டுகின்றனர். ஜனநாயக ரீதியில், கருத்துரிமை தளத்தில் தமக்கிருக்கும் உரிமைகளைப் பயன்படுத்தி நியாயமாகப் போராடும் தரப்பினருக்கு பயங்கரவாத முத்திரை கொடுத்து அமுக்குவதற்கு வழியேற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது.

இலங்கைக்கு எவ்வளவு தான் தீனி போட்டாலும் அதன் பசி அடங்குவதாக இல்லை என்ற முடிவுக்கே இந்தியா வரவேண்டும். கடந்த 2800 வருட காலமாக இந்திய மேலாதிக்கத்தை எதிர்த்து சிங்கள தேசம் போராடி வந்திருக்கின்றது. இந்த மிகப்பெரும் காலப் பகுதியில் சோழர்களைத் தவிர வேறு எந்த இந்தியத் தரப்பினாலும் இலங்கை ராஜீக ரீதியில் கட்டுக்குள் வைத்திருக்க இயலவில்லை.

இந்தியாவுக்கு இருக்கும் மிகப்பெரும் பாதுகாப்புசார் தலையிடியாக இலங்கை வந்திருக்கிறது. நீ தராவிட்டால் உனக்கு அச்சம் தரும் சக்தியிடம் போவேன் என்கிற கோசத்தின் அடிப்படையில் இந்தியாவைக் கையாளும் இலங்கையினிடத்தில் இந்தியா 2800 வருடகாலத் தோல்வியைச் சந்தித்திருக்கிறது.

தற்போதும் கூட இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்க இந்தியா தன் சக்திக்கு அப்பாற்பட்ட உதவிகளைச் செய்தது. இந்த உதவிகளின் பிரதிபலனாகத் தனக்கு நன்மையளிக்கும் 13ஆம் திருத்தத்தின் அரைப்பங்கையாவது நடைமுறைப்படுத்துமாறே இலங்கையை வலியுறுத்தியது.

ஆனால் இலங்கையோ வாங்குவதையெல்லாம் வாங்கிக் கொண்டு, கடன் மறுசீரமைப்பு தொடர்பான கடிதத்தையும் பெற்றுக் கொண்டு, பழையபடி முருங்கையில் ஏறிக் கொண்டது. இலங்கையின் அரசியலின் இயக்க சக்தியாக இருக்கும் பௌத்த பிக்குகளைக் கொண்டு 13 ஆம் திருத்தச் சட்டத்தையே எரியூட்டி விட்டது.

இந்தியா எந்த வடிவிலும் சிங்களத் தேசியவாத அரசியலுக்குள் நுழைய முடியாது. நுழைந்தால் எரிப்போம் என்கிற மனநிலையில் தான் சிங்கள தேசம் எழுந்து நிற்கிறது. எனவே இலங்கையை மிரட்டுவதற்கு புலிகள் தொடர்பான அறிவித்தலை பழ.நெடுமாறன் ஊடாக மீளக் கையிலெடுத்திருக்கிறது இந்தியா.

இந்த அறிவிப்பின் பின்னால் இந்தியா தான் இருக்கிறது என்பது எப்படி சொல்ல முடிகிறது? புலிகள் இயக்கம் இந்தியாவினால் தடை செய்யப்பட்டுள்ளது. அத்தோடு புலிகளின் அழிவிற்குப் பெரும் பங்காற்றிய நாடும் இந்தியா ஆகும்.

2019ஆம் ஆண்டு கூட புலிகள் மீதான தடைவிதிப்பை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடித்த நாடு இந்தியா.

இந்நிலையில் பொதுவெளியில் தோன்றி, ஊடகங்களுக்கு முன்பாக பழ.நெடுமாறன் போன்ற ஒரு தலைவர் (ஏற்கனவே பொடா சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்) பிரபாகரன் நலமுடன் இருக்கிறார். அவருடன் இப்போதும் தொடர்பில் இருக்கிறேன். மீளவும் வருவார் என அறிக்கை விடுவதெல்லாம் எந்தத் துணிச்சலில் இடம் பெறுகின்றது.

கண்ணுக்கு முன்பாக நடந்த குஜராத் படுகொலை பற்றிய பிபிசியின் ஆவணப் படத்தைத் திரையிடுவதற்கே தடை விதித்த நாடு புலிகள் இயக்கம் பற்றிய பொது அறிவிப்புக்கு எவ்வாறு அனுமதி கொடுக்கும்? இந்த செய்தியின் பின்பு இந்தியாவின் அனைத்து ஊடகங்களும் ஒரே சுருதியில் அலற விடப்பட்டதன் நோக்கம் தான் என்ன? இலங்கை என்றுமில்லாத பொருளாதார சீரழிவையும், அரசியல் ஸ்திரமின்மையையும் எதிர்கொண்டிருக்கிறது.

தமக்கும், சிங்கள தேசத்திற்கும் விசுவாசமான தலைவர் யார் என்பதைக் கண்டு பிடிப்பதற்கே சிங்கள மக்கள் படாத பாடுபடுகின்றனர். முன்பெல்லாம் புலிகளையும், தமிழர்களையும் கொன்றொழிப்பேன் எனச் சபதமிடும் தலைவர்களின் யாரின் சுருதி அதிகமாகக் கேட்கிறதோ அவர்களை ஏக தலைவர்களாகத் தெரிவு செய்வது சிங்கள மக்களுக்கு எளிதாக இருந்தது.

புலிகளற்ற நிலையில் நிலமை அவ்வாறில்லை. நம்பியிருந்த கோட்டபாய ராஜபக்சவே இரண்டு வருடங்களுக்குக்குக் கூட தன் மக்களுக்கு உண்மையாக இருக்கவில்லை. எனவே தமது தலைவர்கள் விடயத்தில் சிங்கள மக்கள் விரக்தியுற்றுள்ளனர்.

தம் கடந்த கால அரசியல் தெரிவுகள் குறித்து மீள்விசாரணை செய்கின்றனர். தாம் தவறாக வழி நடத்தப்பட்டிருக்கிறோம் என்ற புரிதலுக்கு வரத் தொடங்கியிருக்கின்றனர். இந்தப் புரிதல் சிங்கள மக்கள்மயப்பட்டால், குழம்பிய குட்டையில் மீன்பிடித்துப் பழகிய இந்தியா உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்குமே ஆபத்தானதாகும்.

(22ம் பக்கம் பார்க்க)

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்வரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.


ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

11 பெப்ரவரி 2023 முதல் 17 பெப்ரவரி 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### Dr இரத்தினவடிவேல் மயில்வாகனம்

மலர்வு:- 02.04.1927 உதிர்வு:-22.02.2012

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டு சிவபதம் அடைந்த அமரர் டாக்டர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களின் 11வது ஆண்டு நினைவு நாள் 17 பெப்ரவரி 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் அமரர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பிறேமாவதி நவரத்தினம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பிறேமாவதி நவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 14 பெப்ரவரி 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி, செஞ்சோலை அன்பு ஆகிய 3 இல்லக்குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பிறேமாவதி நவரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 13 பெப்ரவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 17வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி ருக்மணிதேவி முத்தையா

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வி ருக்மணிதேவி முத்தையா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாள் 12 பெப்ர வரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது உறவுகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது உற்றார், உறவினர்களோடு இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சீனித்தம்பி செல்வம்

அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 14வது ஆண்டு நினைவுநாள் 18 பெப்ரவரி 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம்

வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு தினம் 20 பெப்ரவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




12 பெப்ரவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



12 பெப்ரவரி 2023 ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்த செல்வி ருக்மணிதேவி முத்தையா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது உறவுகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



13 பெப்ரவரி 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் ரமேஷ் கௌரி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஆர்த்தியின் 19வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஆர்த்தி தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




13 பெப்ரவரி 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி அஷ்மிதா அரங்கன் அவர்களின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி அஷ்மிதா அரங்கன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்புவகைகளும் வழங்கி மகிழ்ந்தார்.



13 பெப்ரவரி 2023 திங்கட்கிழமை நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு துரைச்சாமி கதிரேசபிள்ளை அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



14 பெப்ரவரி 2023 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பிறேமாவதி நவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



14 பெப்ரவரி 2023 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பிறேமாவதி நவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



14 பெப்ரவரி 2023 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பிறேமாவதி நவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



16 பெப்ரவரி 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் ஹரிச்சந்திரன் சாந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஹரிசாவின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஹரிசா தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



17 பெப்ரவரி 2023 வெள்ளிக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திருமதி கந்தசாமி பரமேஸ்வரி அவர்களது 85வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி கந்தசாமி பரமேஸ்லரி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




17 பெப்ரவரி 2023 வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த டாக்டர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




உ

சுவாமியே சரணம் ஐயப்பா!

# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்



635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8
Tel: 416-321-6104 | Fax: 416-321-7558



## மஹா சிவராத்திரி விரத விஞ்ஞாபனம்

**காலம்: 18.02.2023 – சனிக்கிழமை**

மெய்யடியார்களே!

கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் மஹா சிவராத்திரியை முன்னிட்டு 18.02.2023 சனிக்கிழமை பகல் வழமையான பூஜைகள் நடைபெற்று மாலை 5:00 மணிமுதல் நான்கு ஜாமமும் சிறப்பு அபிஷேகமும், பூஜைகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். அதிகாலை 5:00 மணிக்கு பாறணை அபிஷேகம், பூஜை, சுவாமி புறப்பாடு நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும்.
சிவனடியார்கள் அனைவரையும் இப்புண்ணிய விரதத்தில் கண் விழித்திருந்து நற்பலனைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

1ஆம் காலம் – மாலை 5:30 மணிக்கு 10 கும்ப அபிஷேகம், பூஜை நடைபெறும். பின்னர் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

2ஆம் காலம் – இரவு 9:00 மணிக்கு 10 கும்ப அபிஷேகம், பூஜை நடைபெறும். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடை பெறும்.

3ஆம் காலம் – இரவு 11:00 மணிக்கு 108 சங்காபிஷேகம் (லிங்கோற்பவ காலம்) சிறப்பு பூஜைகள், கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும்.

4ஆம் காலம் – காலை 3:00 மணிக்கு 10 கும்ப அபிஷேகம், பூஜை, பஜனை நடை பெறும்.

பாரணை பூஜை காலை 5:00 மணிக்கு அபிஷேகம், பூஜை, பின்னர் சுவாமி புறப்பாடு நடைபெற்று, அன்னதானம் வழங்கப்படும்.
சிவலிங்கப் பெருமானுக்கு உங்கள் கைகளால் அபிஷேகம் செய்யலாம்.

416 - 321 - 6104

ஆலய அறங்காவலர் சபையினர்



தமிழீழத்தின் இசை வேந்தன்

# வர்ண.ராமேஸ்வரன்

நினைவரங்கத்தில்

உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகையின்

## 30வது ஆண்டு விழா

# இசைச் சங்கமம் 2023

தமிழக - கனடிய பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன்

## கலைமாமணி

# ராஜேஸ் வைத்தியா



**6:00PM**

CHINESE CULTURAL CENTRE

**5183 SHEPPARD AVE. EAST**

SCARBOROUGH

**APRIL 23 2023**

அன்பளிப்பு

| VVIP | VIP | |
|---|---|---|
| $200 | $100 | $50 |




**தொடர்புகட்கு: ஈழநாடு பரமேஸ் 416-841-9600**

விழா சரியாக மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.

# அழகான வீடு விற்பனைக்கு

JUDE REALTOR

## 3210 Regional Road 30, Whitchurch-Stouffville


4+1 4



JUDE GNANENDRAN
Cell : 416-827-2347

MARISA PATHMANATHAN
Cell : 647-668-2158





# Amma Pawn Broker

## அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

1.0% முதல் 1.5% வரை



## அதிரடி சிறப்பு வட்டி வீதம்



உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

416-757-0034
416-994-3861

# பிச்சையெடுக்க சுதந்திரமா?


கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

நான் பேசப் போவது எமக்கு கிடைத்த சுதந்திரத்தைப் பற்றி அல்ல. இன்று நாம் இழந்திருக்கும் சுதந்திரத்தை மீளப்பெறுவது பற்றியே நான் பேசப் போகிறேன் இப்படிப் பேசியிருப்பவர் நாட்டின் ஜனாதிபதி. நடந்து முடிந்த சுதந்திர தின விழாவில் அவர் ஆற்றிய உரை அது. நாங்கள் சுதந்திரத்தை இழந்து விட்டோம் என்று ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். இதை எப்பொழுது கூறுகிறார்? ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 13 ஆண்டுகளின் பின் கூறுகிறார். ஆயின், 2009 ஆம் ஆண்டு ராஜபக்ச சகோதரர்கள் வென்று கொடுத்த சுதந்திரம் எங்கே? அல்லது அது சுதந்திரமே இல்லையா?

ராஜபக்சக்கள் யாருக்காக நாட்டை மீட்டுக் கொடுத்தார்களோ, அந்த மக்களே இப்பொழுது நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.அதைத் தனது உரையில் ரணில் குறிப்பிடுகிறார்.அதன்பின் நான்கு நாட்கள் கழித்து நாடாளுமன்றத்தில் கொள்கை விளக்க உரையிலும் அவர் அதைக் குறிப்பிடுகிறார். நாட்டை விட்டுப் போகாதீர்கள் என்று.

அண்மையில் முகநூலில் ஒரு மூத்த தமிழ் அரசியல் செயற்பாட்டாளரின் மகன் ஒரு பதிவைப் போட்டிருந்தார். தான் சந்திக்கும் பெரும்பாலான நண்பர்கள் எப்படி நாட்டை விட்டு வெளியேறலாம் என்பதைப் பற்றியே கதைக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இறுதிக்கட்டப் போரில் வன்னி கிழக்கில் வசித்த ஒரு ஊடகவியலாளர் சொன்னார்... அக்கால கட்டத்தில் ஒன்றில் சாலை கடற்கரையை அல்லது வங்கக் கடலைப் பார்த்தபடி எந்த வழியால் தப்பி போகலாம்? எப்பொழுது தப்பி போகலாம்? என்று சிந்தித்ததை ஒத்த நிலைமை இது. அக்கால கட்டத்தில் பெரும்பாலான பொதுமக்கள் தப்பிப் போவதைப் பற்றியே சிந்தித்தார்கள். 13 ஆண்டுகளின் பின் இப்பொழுது நாடு முழுவதும் அந்த நிலைமை வந்திருக்கிறது. ஆயின் ராஜபக்சக்கள் வென்று கொடுத்த சுதந்திரம் எங்கே? அல்லது அது சுதந்திரமே இல்லையா? அதைச் சாப்பிட முடியாதா? அதை வைத்து உழைக்க முடியாதா?

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை ராஜபக்சக்கள் தோற்கடித்தார்கள். ஆனால் அதற்காக அவர்கள் எந்தெந்த நாடுகளிடம் கையேந்தினார்களோ அந்த நாடுகளிடம் நாட்டில் ஏதோ ஒரு பகுதியை அல்லது ஏதோ ஒரு வளத்தை இழந்து விட்டார்கள். சீன விரிவாக்கம், அதற்கு எதிரான இந்தோ பசிபிக் வியூகம், குவாட் வியூகம் என்பதற்குள் இச்சிறிய நாடு சிக்கி விட்டது.

நாட்டின் துறைமுகங்களில் ஒன்றாகிய அம்பாங்கோட்டை துறைமுகத்தை சீனா 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எழுதி பெற்றுக் கொண்டு விட்டது. கொழும்புத் துறைமுகத்துக்கு அருகே சீனா ஒரு துறைமுகப் பட்டினத்தைக் கட்டியெழுப்பி விட்டது. அத்துறைமுகப் பட்டினத்துக்கு நாட்டில் உள்ள மாகாண சபைகளை விடவும் சில அதிகாரங்கள் விசேஷமாக கொடுக்கப்பட்டிருப்பதாக விமர்சிக்கப்படுகிறது. தன் சொந்த மக்களுக்கு கொடுக்கத் தயாரற்ற அதிகாரங்களை பிறத்தியாருக்கு கொடுக்கிறது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு. ஒரு காலம் தேரவாத சிங்கள பௌத்தத்தின் மரபுரிமை சின்னங்களே இந்த நாட்டின் அடையாளங்களாக இருந்தன. ஆனால் இப்பொழுது சீனா கட்டிக் கொடுத்த தாமரை கோபுரந்தான் நாட்டின் நவீன அடையாளமாக மாறியிருக்கிறது. சீன விரிவாக்கத்தின் பலனாக இலங்கைத்தீவின் வரைபடமே மாறிவிட்டது.

சீன விரிவாக்கத்துக்கு எதிராக இந்தியா தனது நிலைகளை இச்சிறிய தீவுக்குள் பலப்படுத்த முற்படுகின்றது. குறிப்பாக வடக்கில் கடலட்டை ஒரு ராஜதந்திரக் கருவியாக மாறி விட்டது.



அது மட்டுமல்ல போரை வென்ற ராஜபக்சக்களின் சுதந்திரம் பெருமளவுக்கு நாட்டுக்குள்ளேயே சுருங்கத் தொடங்கி விட்டது. அமெரிக்க கண்டத்தின் இரு பெரிய நாடுகளில் அவர்கள் பயணம் செய்யவும் சொத்துக்களை முதலீடு செய்யவும் தடை உருவாகியிருக்கிறது. அது போன்ற தடைகள் ஐரோப்பாவுக்கும் பரவக்கூடும்.

ராஜபக்சங்களுக்கு அமெரிக்க கண்டத்தில் மட்டும் தடையில்லை, உள்நாட்டிலும் அவர் களுக்கு கடந்த ஆண்டு பாதுகாப்பு இருக்கவில்லை. அதனால் தான் மூத்த ராஜபக்சக்கள் நாட்டின் படைத்தளங்களில் ஒழிந்தார்கள். அல்லது நாடு விட்டு நாடு ஓடிக் கொண்டிருந்தார்கள். சொந்த நாட்டிலேயே அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய் விட்டது. அவர்கள் வென்று கொடுத்த நாட்டிலேயே அவர்களுக்கு நிம்மதியாக உறங்க முடியாமல் போய்விட்டது. ஏன் இந்த நிலை வந்தது? அப்படியென்றால் அவர்கள் பெற்ற வெற்றியின் பொருள் என்ன?

யுத்தந்தான் நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கியது என்றால்.. யுத்தம் முடிந்த பின்னரும் ஏன் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியவில்லை? நாடு ஏன் அதன் முதலீட்டுக் கவர்ச்சியை இழந்தது?

ஏனென்றால் யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்ற முடியவில்லை. அப்படி மாற்றவும் முடியாது. ஏனென்றால் நாட்டின் மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினரை பூச்சி, புழுக்களைப் போல கொன்று குவித்துப் பெற்ற வெற்றியது. ஒரு இனப்படுகொலையை அரசியல் தீர்வாக மாற்ற முடியாது.மாறாக இனப்படுகொலைக்கு எதிரான நீதி தான் அரசியல் தீர்வாக அமைய முடியும். அதைத் தான் தமிழர்கள் கேட்கிறார்கள். முழுமையான 13ஐ அல்ல.

ரணில் விக்கிரமசிங்க சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிடப் போவதாக எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தினார். ஆனால் சுதந்திரதின விழாவன்று அவரால் அப்படிப்பட்ட அறிவிப்பு எதனையும் வெளியிட முடியவில்லை. அவர் கொழும்பில் 200 மில்லியன் ரூபாய் செலவில் சுதந்திர தினத்தை கொண்டாடிய பொழுது, தமிழர் தாயகத்தில் சுதந்திர தினம் ஒரு கரி நாளாக அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி தமிழ் மாணவர்கள் ஊர்வலம் போனார்கள்.

தமிழ் மக்கள் சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டிப்பது இது தான் முதல் தடவையல்ல. கடந்த பல தசாப்தங்களாக அவர்கள் அவ்வாறு தான் அனுஷ்டித்து வருகிறார்கள். 1957 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டிக்குமாறு கேட்டது. அந்த அழைப்பை ஏற்று திருமலையில் நடராஜன் என்றழைக்கப்படும் இளைஞர் மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஏறி கட்டப்பட்டிருந்த சிங்கக் கொடியை அகற்றி கறுப்பு கொடியை கட்ட முற்பட்டார். அவரை திருக்கோணமலை சந்தையில் வியாபாரஞ் செய்த ஒரு சிங்களவர் வேட்டைத் துவக்கினால் சுட்டு வீழ்த்தினார். இன்று வரையிலும் நடராசனுக்கு நீதி கிடைக்கவில்லை. தமிழ் மிதவாதிகளால் தூண்டி விடப்பட்டு தமிழ் இளையோர் எத்துணை துணிகரமான செயல்களில் இறங்க முடியும் என்பதற்கு நடராசன் முதலாவது முன்னுதாரணம். தமிழ் மக்களின் போராட்டத்தில் முதல்வித்து அவர்.

நடராசனுக்குப் பின் அவ்வாறு துணிச்சலாகத் தங்கள் உயிர்களை, உறுப்புகளை,சொத்துக்களை,கல்வியை,இழந்த தியாகிகளின் மிகநீண்ட பட்டியல் தமிழ்மக்களிடம் உண்டு. ஆனாலும் நடராசன் சுட்டு வீழ்த்தப்பட்டு 65ஆண்டுகளின் பின்னும்,தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. சுதந்திர தினம் கரிநாளாகவே காணப்படுகிறது.

ஆனால் நடராசனை கறுப்புக்கொடி ஏந்துமாறு தூண்டிய தமிழ் மிதவாதிகளின் வழி வந்தவர்கள் பின்னாளில் தாங்களே சுதந்திரதின விழாவில் தேசியக் கொடியை கைகளில் ஏந்தி அசைத்தார்கள். கொல்லப்பட்ட நடராசனை அதை விட கேவலமாக அவமதிக்க முடியாது. அவ்வாறு ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி காலகட்டத்தில், சுதந்திரதின விழாவில் பங்கு பற்றிய தமிழ்த் தலைவர்கள், இப்பொழுது மட்டக்களப்பில் காந்தி பூங்காவில் காந்திக் குல்லாயும் கறுப்புக் கொடியுமாக நிற்கிறார்கள். அவர்கள் எதற்காக காந்திக் குல்லாய் அணிந்தார்கள் என்று தெரியவில்லை.

ஆனால் அவர்களுடைய நடப்பு அரசியலை வைத்து பார்க்கும் போது, அவர்களுடைய தோற்றம் வினோதஉடைப் போட்டியில் வேசமிட்டு வந்தவர்களைப் போல காணப்பட்டது. அவர்கள் விதவிதமான வினோத உடைகளை அணிந்து தமிழ் மக்களைக் கவர முயற்சிக்கிறார்கள்.ஒருபுறம் தமிழ் அரசியல் வாதிகள் அரசியலை வினோத உடைப் போட்டியாக மாற்றுகிறார்கள், இன்னொருபுறம் ஜனாதிபதி ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு தருவேன் என்கிறார். கடந்த புதன் கிழமை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் போலீஸ் அதிகாரம் தொடர்பில் இப்போதுள்ள நிலைமைகளில் மாற்றம் இல்லை என்று கூறுகிறார்.

அதாவது 13 மைனஸ்? அதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் தமிழ் மக்களுக்கு போலீஸ் அதிகாரத்தைப் பெறும் சுதந்திரம் இல்லை. ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஒரு தீர்வைப் பெறும் சுதந்திரந் தான் உண்டு. ஆனால் அதைக் கூறியது யாரென்றால் சுதந்திரமில்லாத ஒரு நாட்டின் தலைவர்?

புவிசார் அரசியல் விளக்கங்களின்படியும், பூகோள அரசியல் விளக்கங்களின் படியும் ஒரு பிராந்தியப் பேரரசின் செல்வாக்கு மண்டலத்தில் காணப்படும் ஒரு சிறியநாடு முழு அளவுக்கு சுதந்திரமானதாக இருக்க முடியாது. ஆனால் அச்சிறிய நாடு வெளிச்சக்திகள் தலையிட முடியாதபடி உருகிப் பிணைந்த ஒரு நாடாக இருந்தால், அது ஒப்பீட்டளவில் ஆகக்கூடிய பட்சம் சுதந்திரமாக இருக்கலாம்.

சிறிய நாடுகளைப் பொறுத்தவரை சுதந்திரத்தின் அளவு என்பது ஐக்கியத்தின் அளவுதான் நல்லிணக்கத்தின் அளவு தான். அந்தநாட்டில் வாழும் எல்லா மக்கள் கூட்டங்களையும் அந்த நாட்டின் சகநிர்மாணிகளாக ஏற்றுக் கொண்டு பல்லினத்தன்மை மிக்க ஒரு நாட்டைக் கட்டியெழுப்பினால், அது ஆகக்கூடிய பட்சம் சுதந்திரமாக இருக்கலாம். இல்லையென்றால் தனக்குள் மோதிக் கொண்டிருக்கும் ஒரு நாட்டை வெளிச்சக்திகள் வேட்டையாடும். அதுவும் இலங்கை போன்று மூன்று

(22ம் பக்கம் பார்க்க)



# சூழ்நிலைக் கைதிகளாக தமிழ்த்தேசியத் தலைமைகள்

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் உடைந்து பல துண்டுகளாகச் சிதறிக் கிடப்பதையிட்டு போராளி ஒருவர் கவலையோடு சில விடயங்களைப் பேசினார்.

கூடவே சில கேள்விகளையும் எழுப்பினார். அவர் எழுப்பிய கேள்விகள் இது தான்.

1. தற்போது மேலும் பல துண்டுகளாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உடைந்துள்ளது. அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி வெளியேறி உள்ளது. உள்ளுராட்சித் தேர்தலில் பல அணிகள் போட்டியிடுகின்றன. இது தமிழரின் அரசியலை பலவீனப்படுத்தும் நடவடிக்கையல்லவா?

2. இப்படிப் பிரிந்தும் உடைந்தும் பல அணிகளாக நிற்பது தவறானது. இந்த நிலையானது ஒடுக்குகின்ற சிங்கள மேலாதிக்கவாதிகளுக்கு வாய்ப்பாகும். ஒடுக்குமுறைக்குள்ளாகியுள்ள மக்களுக்கு பாதகமாகும் என்பதைத் தமிழ் அரசியல் ஆய்வாளர்கள், புத்திஜீவிகள், மதகுருக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகத்தினர், புலம்பெயர் நாடுகளில் உள்ளோர் போன்றோர் ஏன் கண்டிக்கவில்லை?



3. இப்படி உடைந்தும் பிரிந்தும் நிற்கும் சக்திகளையும் கட்சிகளையும் ஏன் ஓரணிக்குள் கொண்டு வருவதைப் பற்றி யாரும் சிந்திக்காமல் உள்ளனர்? அப்படி யராவது சிந்தித்திருந்தால் அவர்கள் எடுத்த முயற்சிகள் என்ன?

4. மூத்த அரசியல் தலைவர்களான சம்மந்தன், மாவை சேனாதிராஜா, விக்கினேஸ்வரன், சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா தொடக்கம் அடுத்த நிலையில் உள்ள தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்றோருடன் இதைக் குறித்து இந்த அவல நிலையைக் குறித்து யாராவது முறையாகப் பேசியுள்ளனரா?

5. இந்தத் தலைவர்கள் தமிழ் மக்களுடைய விடுதலையைப் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் எவ்வாறு சிந்திக்கின்றனர்?

6. கடந்த காலத்தில் ஒற்றுமையின் அவசியத்தைப் பற்றி தீவிரமாக வலியுறுத்திக் கொண்டிருந்தவர்கள், நிகழ்காலத்தில் அந்த ஒற்றுமையைச் சிதைப்பவர்களாகவே உள்ளனர்? இதற்கான காரணங்களை இவர்கள் விளக்குவார்களா? அல்லது இவர்களை ஆதரிப்போர் இதற்கான காரணங்களைச் சொல்வார்களா? அல்லது இதைப் பற்றித் தமிழ் அரசியல் ஆய்வாளர்கள், புத்திஜீவிகள், மதகுருக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகத்தினர், புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் விளக்கமளிப்பார்களா?

7. இதைக் குறித்து இந்தச் சீரழிவு நிலையைக் குறித்து தமிழ் ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களினதும் நிலைப்பாடு என்ன? பதில் என்ன?

8. இந்த நிலை தொடருமானால் தமிழ் மக்களுடைய அரசியல் எதிர்காலம் எப்படி அமையும்?

9. அல்லது இப்படிப் பிரிந்து நிற்கும் அணிகளில் எந்த அணி சரியானது? எது உண்மையானது? எது மெய்யாகவே தமிழ் மக்களுடைய அரசியலைச் சரியான திசையில், சரியான முறையில் கொண்டு செல்கிறது என்பதையாவது இவர்கள் மக்களுக்குத் தெரிவிக்கலாம் அல்லவா?

10. அப்படியில்லை என்றால் இந்த அரசியற் கட்சிகளின் சீரழிவுக்கு நிகராகவே இந்தத் தரப்பினரும் உள்ளனர். இவர்களும் வேடிக்கை பார்க்கின்றனர். தங்களால் எதையும் செய்ய முடியாது என்ற கையறு நிலையில் உள்ளனர் என்றே அர்த்தமாகும் அல்லவா? இதை விட்டு விட்டு ஒவ்வொரு தரப்பைப் பற்றியும் விமர்சிப்பதில் என்ன பயன்? என்று கேட்கிறார் நண்பர்.

தமிழ் மக்களின் நிலையையும் அவர்களுடைய அரசியலையும் ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கு இந்தக் கேள்விகளின் நியாயமும் அதற்கான அடிப்படையும் புரியும். அவர்களுக்கு இந்த நிலை கவலையையே அளிக்கும். காரணம், அந்தளவுக்கு தமிழ்ச் சமூகம் தன்னுடைய அரசியலுக்காகவும் விடுதலைக்காகவும் இழப்புகளைச் சந்தித்திருக்கிறது. சக்திக்கு மீறிப் பெருந்தியாகங்களைச் செய்துள்ளது. இதற்கெல்லாம் பெறுமதியைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாகப் பெரும் பின்னடைவையே அது சந்தித்திருக்கிறது.

அதாவது வரலாற்றை முன்னகர்த்துவதற்குப் பதிலாக தமிழ்த் தேசிய(?) அரசியற் சக்திகள் அதைப் பின்தள்ளியுள்ளன. மேலும் பின்தள்ளிக் கொண்டிருக்கின்றன.

இவ்வளவுக்கும் இந்தத் துயர வரலாற்றில், தியாக வரலாற்றில் இணைந்தும் விலகியும் பயணித்தவர்களே இன்று அரசியல் அரங்கில் இருப்பவர்கள். மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் போன்றோர் நேரடியாகவே கடினமான அரசியற் பயணத்தின் வழியாக வந்தவர்கள். மேலும் சொன்னால், சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா போன்றோர் கூட நெருக்கடிகளின் வழியே அரசியலைத் தொடர்ந்தவர்கள். இவர்கள் கூட தங்களுடைய கடந்த காலத்தின் பெறுமதியைக் குறைக்கும் விதமாக நடந்து கொள்வது கவலை அளிக்கிறது.

அரசியலில் இதொன்றும் புதியதல்ல. வரலாறே இப்படித் தான் ஏற்ற இறக்கத்தோடு பயணித்திருக்கிறது என்று யாரும் சொல்லக் கூடும்.

இது தவிர்க்க முடியாத நிலை. இதை விட வேறு எதைச் செய்ய முடியும் என்று இவர்கள் கேட்கக்கூடும். அப்படிக் கேட்டால் அல்லது அப்படிச் சொன்னால் இவர்கள் சூழ்நிலைக் கைதிகளாக உள்ளனர் என்றே அர்த்தமாகும்.

அரசியல் தலைவர்கள் ஒரு போதும் சூழ்நிலைக் கைதிகளாக இருக்க முடியாது. அப்படி இருந்தால் அவர்கள் தலைவர்களில்லை. சூழ்நிலையைச் சரியாகக் கையாளும் ஆளுமை உள்ளவர்களே தலைவர்களாகின்றனர். மற்றவர்கள் வரலாற்றைத் துயரக் குழிக்குள்ளேயே தள்ளி விடுகின்றனர்.

இன்றைய சீரழிவு அரசியலில் துணிவுடன் நிமிர்ந்து நிற்கக் கூடிய, தீர்மானங்களை உறுதியோடு எடுக்கக் கூடியவர்களே வெற்றியடைவர். மக்களுக்கான வெற்றியையும் விடுதலையையும் அவர்களால் தான் அளிக்க முடியும்.

இதற்கு சில விலைகளைக் கொடுக்க நேரிடும். இப்படித் துணிவுடன் நிற்கும் போது பல சவால்களைச் சந்திக்கவும் வேண்டியிருக்கும். ஆனால், அதைச் சந்தித்துத்தான் ஆக வேண்டும்.

துயரம் என்னவென்றால், கடந்த காலத்தில் மிகச் சவாலான, உயிராபத்து நெருக்கடிகளைச் சந்தித்துக் கடந்து வந்தவர்கள், இன்று மிகச் சாதாரண அரசியல் நெருக்கடிகளைச் சந்திக்கவும் கடக்கவும் பயப்படுகின்றனர். இனியும் றிஸ்க் எடுக்க முடியாது என்று சிந்திக்கிறார்களா? அல்லது றிஸ்க் எடுப்பதில் களைப்படைந்து விட்டார்களா?

அப்படிக் களைப்படைந்து விட்டார்களென்றால், அவர்கள் அரசியலில் இருந்து விலகி விடலாம். களத்தில் நிற்பதாக இருந்தால் களமாடத்தான் வேண்டும்.

இதேவேளை இந்தச் சந்தர்ப்பத்தில் மேலும் சில விடயங்களை நினைவுட்ட வேண்டியுள்ளது. தமிழ் அரசியல் பல தடவை இந்த மாதிரி உடைந்து உதிரித் தன்மையைக் கொண்டிருந்திருக்கிறது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்து செல்வநாயகம் தரப்பு பிரிந்து சென்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரிந்து சென்றது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸுீம் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் பிரிந்து சென்றன. ஏன் ஒரு காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்விலிருந்து தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி பிரிந்து சென்றது. அண்மையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்து (தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி) மணிவண்ணன் அணி பிரிந்து சென்றது. அதைப்போல ரெலோவிலிருந்து ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம் தரப்புப் பிரிந்து சென்றது.

ஜனநாயகச் சூழலில் இதெல்லாம் வழமை எனச் சிலரும் இது தமிழ் அரசியலில் மட்டுமல்ல, சிங்கள, முஸ்லிம், மலையக அரசியலிலும் நிகழ்வது தான் என்று வேறு சிலரும் கூறக்கூடும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து மலையக மக்கள் முன்னணியும் பின்னர் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் உருவாகிய வரலாறு இதைச் சொல்லும். அதைப் போல ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து உடைந்தும் பிரிந்தும் சென்ற தரப்புகளையும் இவர்கள் அடையாளம் காட்டலாம்.

ஏன், ஆயுதம் தாங்கிய விடுதலை இயக்கங்களிலிருந்து உடைவும் பிரிவும் உண்டாகவில்லையா என்றும் நீங்கள் கேட்கலாம். புலிகளிலிருந்து உடைந்து புளொட் உருவாகியதையும் ஈரோஸிலிருந்து உடைந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் உருவாகியதையும் அதிலிருந்து உடைந்து ஈ.பி. டி.பி உருவாகியதையும் இவர்கள் காட்டலாம். மட்டுமல்ல ஈழதேசிய விடுதலை முன்னணி என்ற நான்கு இயக்கங்களின் கூட்டைப் புலிகள் உடைத்து நொறுக்கவில்லையா என்றும் கேட்கலாம்.

இந்தத் தவறுகளின் விளைவுகளைத் தானே தமிழ்ச் சமூகம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இன்று புலிகள் சந்தித்திருக்கின்ற வரலாற்றுத் துயரம் உணர்த்துவதும் இதைத்தானே. ஒரு கட்டத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு தாமே தடை செய்த தரப்புகளை ஏற்று அரவணைத்துக் கொண்டதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியதை இங்கே நினைவுட்டிக் கொள்ளலாம்.

இதையெல்லாம் கவனத்திற் கொண்டே புதிய எதிர்காலத்துக்கான அரசியலை முன்னெடுக்க வேண்டும்.

ஆம், தமிழ் அரசியலை முற்றிலும் புதிதாக யுத்தத்துக்குப் பிந்திய அரசியலாக முன்னெடுக்க வேண்டும். அதற்குப் பழைய வழிமுறைகளும் பழைய சிந்தனைகளும் ஒரு போதும் உதவாது.

நீங்கள் புதிய முறையில் பந்து வீசினால் தான் மட்டையைப் பிடிப்பவருக்குக் குழப்பமும் தடுமாற்றமும் உண்டாகும். எப்படி அந்தப் பந்தை எதிர்கொள்வது என்று தெரியாமல் தத்தளிப்பார்கள்.

ஆனால், பிரிந்தும் உடைந்தும் சிதறிக் கிடக்கும் அத்தனை தரப்புகளும் பழைய உழுத்துப போன அரசியலையே கொண்டுள்ளன. பழைய அரசியல் வழிமுறையைக் கொண்டிருக்கும் வரை எதிர்த்தரப்பில் உள்ளவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது. அவர்கள் அதை மிக எளிதாகவே எதிர்கொள்வர்.

இதனால் தான் இவற்றில் எதைத் தேர்வது என்று தெரியாத தடுமாற்றம் பலருக்கும் உள்ளது. இன்னொரு பக்கம் இதைப் பற்றிப் பலருக்கும் தெரியும். தெரிந்து கொண்டே தெரியாததைப் போல, எதையும் புரியாததைப் போல நடிக்கிறார்கள். நான் உட்படப் பலரும் தமிழ் அரசியலின் பலவீனத்தையும் தவறுகளையும் தொடர்ந்து குறிப்பிட்டு வந்துள்ளோம். அப்படித் தெளிவாகக் குறிப்பிட்டவை, முன்னுணர்ந்து சொன்னவை, விமர்சித்தவை, கண்டித்தவை, குற்றம் சாட்டியவை, சுட்டிக் காட்டியவை அனைத்தும் மெய்யெனக் காலம் நிரூபித்துள்ளது. மேலும் மெய்ப்படுத்தி வருகிறது.

இருந்தாலும் தமிழ் மக்களும் அவர்களிடையே உள்ள மெத்தப் படித்த மேதாவிகளும் அரசியல் அறிஞர்களும் (!) பலதைப் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. புரிந்து கொண்டாலும் அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இல்லை.(22ம் பக்கம் பார்க்க)

# தமிழ் புலம்பெயர் சமூகம் என்ன செய்யலாம்?

தமிழர் அரசியலில் புலம்பெயர் சமூகம் பிரிக்க முடியாதவொரு அங்கம். இதனை எவராலும் சீர்குலைக்க முடியாது. சீர்குலைக்கவும் அனுமதிக்கக் கூடாது. 2009இல் யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து, புலம்பெயர் சமூகம் தமிழ் தேசிய அரசியலில் பிரதான குரலானது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான சர்வதேச குரலாக மாறியது.

எனினும் புலம்பெயர் சமூகத்தின் உழைப்பு எதிர்பார்த்த பலனை தரவில்லை. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைகள், சில தனிநபர்கள் மீதான அமெரிக்க தடைகள், தற்போது முன்னாள் ஜனாதிபதிகளான ராஜபக்சக்கள் மீதான கனடாவின் தடை இவற்றை தவிர குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விடயங்கள் எவையும் கடந்த 13 வருடங்களில் நிகழவில்லை.

இந்த பின்புலத்தில் நோக்கினால், புலம்பெயர் சமூகம் இன்னும் அதிக தூரம் பயணிக்க வேண்டியிருக்கின்றது. அதற்காக ஒன்றுபட்டு உழைக்க வேண்டியிருக்கின்றது. ஆனால் இதிலுள்ள அடிப்படையான சவால் தாயகத்தின் நிலைமையாகும். தாயகமென்று ஒன்று இருந்தால் தான் புலம்பெயர் சமூகம் செயற்பட முடியும்.

தாயகத்தின் பிரதான சவால்கள் இரண்டு. ஒன்று, மிகவும் பலவீனமான அரசியல் தலைமைத்துவம். அதாவது, கடந்த 75 வருடகால தமிழர் அரசியல் வரலாற்றில் இப்போது இருப்பது போன்றதொரு பலவீனமான அரசியல் தலைமைத்துவம் முன்னர் ஒரு போதும் இருந்ததில்லை. சிதறிச் செல்லுவோரை ஒன்றுதிரட்டி, வழிநடத்தக் கூடிய ஆளுமைமிக்க நபர்(கள்) தமிழ் சமூகத்திலில்லை.

கடந்த பதின்மூன்று வருடகால அரசியல் நகர்வுகளை உற்று நோக்கினால், எந்தளவிற்கு தமிழ் தேசிய அரசியல் சிதைந்து, சீரழிந்திருக்கின்றது என்பதை காணலாம். 2009இல் யுத்தம் முடிவுற்ற போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே, தமிழ் மக்களின் ஒரேயொரு தாயக தலைமையாக இருந்தது. ஆனால் இன்றோ பத்து கட்சிகள் தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றன. இப்போது கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சியும் வெளியேறி விட்டது.

இவ்வாறு தாயக அரசியல் சிதைந்து போனமைக்கு சிலரின் சுயநலப் போக்கை ஒரு காரணமாக கூறி முடியுமனாலும் கூட, அனைவரையும் அரவணைத்து, வழிநடத்தக் கூடிய தனிநபர் ஆளுமைகள் இல்லைமையே பிரதான காரணமாகும்.

ஏனெனில் ஒரு அரசியல் இயக்கத்தில் பல்வேறு வகையானவர்கள் வந்து சேர்வார்கள். அவர்களில் சிலர், அரசியலை தங்களின் சுயநலத்திற்கும் புகழுக்கும் பயன்படுத்த வேண்டுமென்று எண்ணுபவர்களாக இருக்கலாம், ஆனால், அவ்வாறானவர்களின் ஆதிக்கத்திற்குள் ஒரு இயக்கம் வீழ்ந்து விடாமல் இருக்க வேண்டுமானால், அது நான் மேலே குறிப்பிட்டவாறான ஆளுமைமிக்க தலைவர்களில் தான் தங்கியிருக்கின்றது. ஆனால் அவ்வாறான ஆளுமைகளுக்கு பஞ்சம் காணப்படுகின்றது அதே வேளை அண்மைக் காலத்தில் அவ்வாறானதொரு ஆளுமை வெளித் தெரிவதற்கான வாய்ப்பும் இல்லை.

இந்த நிலையில் ஒரு கூட்டுத் தலைமை ஒன்றின் மூலம்தான் அரசியலை முன்னெடுக்க முடியும். ஆனால் அதிலும் பிரச்சினைகள் ஏராளம். இவ்வாறானதொரு சூ ழலில் தாயக அரசியலை பலப்படுத்த வேண்டிய பணியும் புலம்பெயர் சமூகத்திற்குண்டு. இதற்கு முன்னரும் சில சந்தர்பங்களில் இந்தக் பத்தியில் சில விடயங்களை சுட்டிக் காட்டியிருக்கின்றேன்.

அதாவது, புலம்பெயர் சமூகம் தாயக அரசியல் கட்சிகள் மத்தியில், ஒரு குறிப்பிட்ட கட்சிக்கான ஆதரவு நிலைப்பாட்டை எடுக்கக் கூடாது. விடயங்களின் அடிப்படையில்தான் தாயக அரசியலில் தலையீடு செய்ய வேண்டும். அவ்வாறில்லாது, கட்சியடிப்படையில் சில நிலைப்பாடுகளை முன்னெடுக்கும் போது, அது புலம்பெயர் சூழலிலும் பிளவுகளை ஏற்படுத்தும். ஏற்படுத்தியுமிருக்கின்றது. ஆரம்பத்திலிருந்தே சில புலம் பெயர் அமைப்புக்கள் இந்த விடயத்தில்



தவறிழைத்திருந்தன. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர் நிலையிலிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சியை சிலர் ஆதரித்தனர். அவர்களை பலப்படுத்த முயற்சித்தனர். அதே போன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசு கட்சியை முன்னிலைப்படுத்துவதற்கு சிலர் முன்னுரிமையளித்தனர். விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய அயுதப் போராட்ட இயக்கங்களுக்கும் இடையில் பல முரண்பாடுகளிருந்ததும், ஏனைய அமைப்புக்களை விடுதலைப் புலிகள் தடை செய்தமையும், மோதலில் ஈடுபட்டதும், பலர் உயிரிழந்ததும் வரலாறு. ஆனால் பிற்காலத்தில் அதே அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட விடுதலைப் புலிகள் அமைப்பு பின்நிற்கவில்லை. காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் சிலவற்றை ஏற்க வேண்டிய யதார்த்தத்தை புலிகளாலும் நிராகரிக்க முடியவில்லை. இந்த பின்னணியில் சிந்தித்தால், 2009இற்கு பின்னரான சூழலில் அனைத்து தரப்புக்களையும் அரவணைத்து, முன்நோக்கி பயணிப்பதில் புலம்பெயர் சமூகம்தான் முன்னணி வகித்திருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. ஆனால் சில கட்சிகளை, சில நபர்களை முன்னி லைப்படுத்தியதன் மூலம் புலம்பெயர் அமைப்புக்கள் சாதித்தது என்ன? எதுவுமில்லை.

கடந்த பதின்மூன்று வருடங்களில் தாயக அரசியல் பலவீனமடைந்திருக்கின்றதே தவிர பலமடையவில்லை. அது பலமடையவில்லையாயின், அந்தப் பலவீனத்திற்கு கட்சிகளை, தனிநபர்களை ஆதரித்த புலம்பெயர் அமைப்புக்களுமல்லவா பொறுப்பேற்ப வேண்டும். தமிழர் தாயகத்தில், அரச ஆதரவு கட்சிகளின் செல்வாக்கு முன்னரை விடவும் அதிகரித்திருக்கின்றது. தற்போது தமிழ் தேசிய அரசியல் தரப்புக்கள் நான்கு அணிகளாக போட்டியிடுகின்றன. இந்த நிலைமையானது, அரசாங்க கட்சிகளை பொறுத்தவரையில், பழம் நழுவி பாலில் விழுந்த கதையாகலாம்.

புலம்பெயர் அமைப்புக்கள் ஒரு விடயத்தை குறித்துக் கொள்ள வேண்டும். ஒரு அரசின் நகர்வுகளுக்கு எதிராகவே புலம்பெயர் அமைப்புக்கள் போராடி வருகின்றன. ஒரு அரசிற்கு இருக்கின்ற எந்தவொரு வாய்ப்பும் புலம்பெயர் சமூகத்திற்கில்லை. ஆனால் ஜரோப்பிய நிலத்தில் நின்றவாறு, மேற்குலகின் மனச்சாட்சியை உலுப்பும் கேள்விகளை முன்வைக்கும் வல்லமை புலம்பெயர் சமூகத்திற்குண்டு. டயஸ் போறா லொபியென்பது இந்த அடிப்படையை கொண்டதாகவே இருக்க வேண்டும். ஆனால் என்னதான் நீதி பற்றியும் ஜனநாயக விழுமியங்கள் தொடர்பில் பேசினாலும் கூட, சர்வதேச நகர்வுகளை தீர்மானிப்பது நீதிக்கான தீர்மானங்கள் அல்ல — மாறாக, பலம்பொருந்திய நாடுகளின் நலன்கள் மட்டுமே இறுதியில் அனைத்தையும் தீர்மானிக்கின்றது. அதனை கருத்தில் கொள்ளாமல் மேற்குலகின் உதாரணமாக கனடிய தடைகளை கருத்தில் கொண்டு திருப்திப்பட்டுக் கொண்டால், அது நமக்கு பயன்படாது.

இது பல்துருவ உலகம். உலக அதிகார கட்டமைப்புக்கள் பெரியளவில் மாறி விட்டன. இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது போன்ற நிலையில் அமெரிக்காவுமில்லை. இன்றைய உலக நகர்வுகளில் பிராந்தியங்கள் பிரதான செல்வாக்குச் செலுத்துகின்றன. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அரசியல் யதார்தங்களை புறம்தள்ளி ஒரு இம்மியளவு கூட நம்மால், நகர முடியாது. இந்த பின்புலத்தில் இந்தியாவின் கரிசனைகள், நிலைப்பாடுகள் தவிர்க்கவே முடியாதவை.

தமிழ் மக்களுக்கான அரசியல் அதிகாரம் தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. அதே வேளை, அதன் அடிப்படையாக இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும் அழுத்தி வருகின்றது. ஒரு பிராந்திய சக்தியும் உடனடி அயல்நாடுமான இந்தியா, இருதரப்பு உடன்பாட்டை கொண்டிருக்கும் போது, அதில் எந்தவொரு வெளித்தரப்பும் தலையீடு செய்ய முடியாது.

மேலும் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் சில விடயங்களில் வேறுபாடுகள் இருந்தாலும் கூட, இந்தோ-பசுபிக் மூலோபயத்தில் இந்தியா ஒரு வலுவான பங்காளி. மேலும் இந்தியா பொருளாதா ரீதியிலும் வேகமாக வளர்ச்சிடைந்துவரும் ஒரு நாடு. அண்மையில் முன்னாள் கலானிய ஆட்சியாளரான பிரித்தானிவையே இந்தியா பொருளாதார ரீதியில் பின்னுக்கு தள்ளியிருந்தது. இந்தியாவின் சர்வதேச முக்கியத்துவம் முன்னரை விடவும் வேகமாக பெருகி வருகின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால், புலம்பெயர் அமைப்புக்கள் மேற்கை தளமாகக் கொண்டு உறுதியுடன் செயற்படும் அதே வேளை, இந்த பிராந்திய யதார்தங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

தற்போது, மீளவும் கொழும்பு அரசியல் தீர்வு தொடர்பில் பேசி வருகின்றது. ரணில் விக்கிரமசிங்க அதில் எந்தளவு தூரம் உண்மையாக இருப்பார் உறுதியாக இருப்பார் என்பது நமது பிரச்சினையில்லை. அது கொழும்பின் சிங்கள அரசியல் சமூகத்தின் பிரச்சினை. ஆனால் ரணில் கையிலெடுத்திருக்கும் விடயம் சிக்கலானது. ரணில் 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக கூறுகின்றார். அதனையே இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. ஆனால் தற்போது அதனை அமுல்படுத்த விடமாட்டோமென்று கூறி, சிங்கள கடும்போக்கு தரப்புக்களும் பௌத்த சங்கங்களும் வீதிக்கு வருகின்றன. 13வது திருத்தச்சட்டத்தின் நகலை கொழுத்தி எதிர்ப்பு வெளியிடப்படுகின்றது.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவோ

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



எவர் எதிர்த்தாலும் நான் சில விடயங்களை செய்யத்தான் போகின்றேன் என்கின்றார். ரணில் விரைவில் இந்தியா செல்லவுள்ளார். பிரதமர் மோடியுடனான சந்திப்பின் போது, ரணில், 13 தொடர்பில் நிச்சயம் பேசுவார். உத்தியோகபூர்வமாக அறிவிக்கவும் இடமுண்டு. இந்த விடயங்களில் புலம்பெயர் சமூகம் அசமந்தமாக இருக்கக் கூடாது. சிலர் (தாயகத்திலும் புலத்திலும்) கூறுவது போன்று இது சாதாரண நகர்வல்ல. இது ஒரு மூலோபாய நகர்வு.

நாங்கள் எப்போதோ, 13வது திருத்தத்தை நிராகரித்து விட்டோம் அது பற்றி இப்போது பேச வேண்டியதில்லையென்று சாதாரண மாக கூறி விட்டுச் செல்லக் கூடிய விடயமல்ல. இது வெறுமனே 13பற்றிய தல்ல. மாறாக இது ஒரு புவிசார் அரசியல் விவகாரம். இந்த விடயங்கள் தொடர்பில் புலம்பெயர் அமைப்புக்கள் நிதானமாகவும், சகிப்புணர்வோடும் விடயங்களுக்கு எதிர்வினையாற்ற வேண்டும். 13இற்கு வெளியிடப்படும் எதிர்ப்பையே சர்வதேச அரங்குகளில் அரசியல் லொபியாக முன்வைக்க வேண்டும். 13இனை அமுல்படுத்த ரணிலால் முடியாமல் போகும் இடம் தான், புலம்பெயர் சமூகத்தின் அடுத்த கட்ட லொபிக்கான அஸ்திபாரமாகும். இந்த லொபியை பலமாக முன்னெடுபதற்கு புலம்பெயர் சமூகம் தன்னை தயார் செய்ய வேண்டும். நான் மேலே குறிப்பிட்டவாறு, பிளவுண்டு செல்லும் தாயக கட்சிகள் மீது முதலிட்டுக் கொண்டிருக்காமல், ஒரு புலம்பெயர் சமூகமாக திரட்சி பெற வேண்டும். இதற்கு அறிவுட்டக் கூடிய தனிநபர்களையம் அமைப்புக்களையும் (இரு இடங்களிலும்) அணி திரட்ட வேண்டும்.

குறிப்பாக, புலம்பெயர் சமூகத்தின் லொபி அமெரிக்காவை தளமாகக் கொண்டிருக்க வேண்டும். வேறு நாடுகளில் என்ன தான் குரல்களை எழுப்பினாலும் அது பெரியளவில் தாக்கங்களை ஏற்படுத்தாது.

உலக ஒழுங்கினை தீர்மானிக்கும் மேற்குலக சக்தி அமெரிக்கா மட்டும்தான். அங்குதான் புலம்பெயர் லொபி மையம் கொள்ள வேண்டும். அப்போது தான் புதுடில்லியுடனும் ஊடாடுவது இலகுவாகும். ஆனால் அதற்கு சில தகுதி நிலைகள் அவசியம்.

புலம்பெயர் செயற்பாடுகளுக்கு தலைமையேற்பவர்கள் தங்களை தாராளவாத அரசியல் விழுமியங்களுக்குரியவர்களாக மாற்றிக கொள்ள வேண்டும். இல்லா விட்டால் நம்மால், அமெரிக்க உலகில் அசைய முடியாது.

## இது நம்ம யாழ்ப்பாணம் 16

# விடுவிக்கப்பட்ட காணிகளும் தொடரும் நெருக்கடிகளும்!

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக யாழ்.நகரில் இருந்து
– பகீரதன் –

பலாலியில் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், எங்களுக்கு எந்த வாழ்வாதாரமும் இல்லை. சந்தோசமும் இல்லை. தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்தே வருகின்றோம என பலாலி மக்கள் கவலை தெரிவித்திருக்கின்றார்கள்.



பலாலி பகுதியில் கடந்த வார இறுதியில் சில காணிகள் விடுவிக்கப்பட்ட பின்னணியில், அது குறித்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அப் பகுதியில் மீள்குடியேறுவதற்காக சென்ற பெண்மணி ஒருவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்த கருத்து, ஒட்டு மொத்தமாக அந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் கருத்தாகவே இருந்தது. அவர் தெரிவித்தது இதுதான் –

1990இல் போர் காரணமாக எனது தாய் தந்தையர் இடம்பெயர்ந்தனர். ஆனால், நாங்கள் அங்கே பிறக்கவில்லை. எங்களுடைய சொந்த நிலத்தை இப்போது தான் நாங்கள் முதன் முறையாகப் பார்க்கிறோம். இங்கிருந்து இடம் பெயர்ந்த பின்னர் எவ்வளவு துயரங்களை அனுபவித்தோம். இப்போதும் அனுபவிக்கிறோம். எந்தவொரு அடிப்படை வசதிகளும் இல்லாத முகாம்களில் தங்க வைக்கப்பட்மோம்.

காணிகளை விடுவித்தமை எமக்கு மகிழ்ச்சி தான். ஆனால், இன்னும் பல இடங்களில் விடுவிக்கப்பட வேண்டியிருக்கின்றது. தற்போது காணிகளை விடுவித்தும் எமக்கு எந்தவிதமான வாழ்வாதாரமும் இல்லை. வீடு சீரமைப்பதற்கும், காணிகளைத் துப்புரவாக்குவதற்கும் அரசாங்கம் வழங்கும் பணம் போதுமானதாக இல்லை என்று அவர் தெரிவித்தார்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கடந்த சுமார் மூன்று தசாப்த காலமாக இருந்த வலிகாமம் வடக்கிலுள்ள 180 ஏக்கர் காணி கடந்த வாரம் விடுவிக்கப்பட்டிருக்கின்றது. போரின் போது மக்களை இரவோடிரவாக துரத்திய படையினர் இப்போது பெரும் ஆரவாரங்களுடன் இந்த காணிகளை விடுவித்து அதனை அரசியலாக்கியிருக்கின்றார்கள். காணி விடுவிப்பை ஒரு நிகழ்வாக ஏற்பாடு செய்து அதனை அரசியலாக்க வேண்டிய தேவை இன்று அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கின்றது.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் இதனைவிட சுமார் இருபது மடங்கு இருக்கின்ற போதிலும், ஒரு சிறிய நிலப்பகுதிதான் இப்போது விடுவிக்கப்பட்டிருக்கின்றது. உத்தியோக பூர்வ தகவல்களின்படி பலாலி பகுதியில் இன்றும் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் காணி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவற்றில் பெரும்பாலானவை விடுவிக்கப்படுவதாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றை விடுவிப்பதற்கு தற்போதைய நிலையில் படையினர் தயாராக இல்லை என்பது தெரிகின்றது.

சுமார் 30– 35 வருடங்களுக்குப் பின்னர் தமது காணிகள் மீளக்கிடைத்திருப்பதில் அந்தப் பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்திருக்கின்றார்கள். ஒரு தலைமுறைக்கும் அதிகமான காலத்தை முகாம்களிலும், உறவினர் இல்லங்களிலும் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு எந்தளவுக்கு நெருக்கடியைக் கொடுத்திருக்கும் என்பது புரிந்து கொள்ளக்கூடியது தான்.



அதனால், பெரும்பாலானவர்கள் மீளக் குடியமர்வதில் அவசரம் காட்டுவதையும் அவதானிக்க முடிகின்றது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், காணிகளை விடுவிப்பதன் மூலமாக தனக்கு முன்னாலுள்ள நெருக்கடியைக் குறைக்க முயல்கின்றதே தவிர, அந்தப் பகுதி மீள்குடியேற்றம் மீள்கட்டுமானம் குறித்த திட்டங்கள் எதுவும் அதனிடம் இல்லை.

காணி விடுவிக்கப்படும் நிலையில் இரண்டு விடயங்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்துவது முக்கியம். முதலாவது, விடுவிக்கப்படும் பகுதிகள் தொடர்பான புதிய கட்டுமானத் திட்டங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. மக்களைப் பொறுத்தவரையில், தமது காணிகளை அவா்கள் பொறுப்பேற்கின்றார்களே தவிர, தமது வீடுகளைத் திருத்தி அமைத்து அந்தப் பகுதிகளில் தமது வாழ்க்கையை மீளத் தொடங்குவதில் எந்தளவுக்கு ஆர்வத்தைக் காட்டுவர்கள் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. காரணம், அடிப்படை வசதிகளோ, கட்டுமானங்களோ அங்கில்லை.

காணிகளைத் துப்புரவாக்கி, வீடுகளைத் திருப்பிக் கட்சி தமது புதிய வாழ்க்கையை ஆரம்பப்பதற்குத் தேவையான பண வசதிகளும்கூட அந்தப் பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான மக்களிடம் இல்லை. பாடசாலைகள், மருத்துவ நிலையங்கள், வங்கிகள், போக்குவரத்து வசதிகள் என்பனவும் கேள்விக்குறியாகத் தான் இருக்கின்றன. அடிப்படையான கட்டமைப்புக்கள் இல்லாத நிலையில் மீள்குடியேற்றம் என்பது எந்தளவுக்கு வெறறிபெறும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கும்.

இதனைவிட வலிகாமம் வடக்கின் பொருளாதார ரீதியான முக்கியத்துவம் குறைத்து மதிப்பிடக்கூடியதொன்றல்ல. விவசாயத்துக்கு மிகவும் வளமான நிலத்தைக்கொண்டுள்ள பகுதி அது என்பது அனைவருக்கும் தெரியும்.

மயிலிட்டியும் அதனையடுத்துள்ள பகுதிகளும் மீன்பிடிக்கு மிகவும் பிரசித்தமானது. இலங்கையிலேயே சிறந்த மீன்பிடித்துறைகளில் ஒன்றாகக் கருதப்படும் பகுதிதான் அது. இவை இரண்டும் இயற்கையாக அமைந்த வளங்கள்.

அதனை விட பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் என்பனவும் இந்தப் பகுதியில் தான் அமைந்திருக்கின்றது. ஆக, இது வர்த்தக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தமிழர்களுக்கு முக்கியமான பகுதிகள். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையும் இந்தப் பகுதியில் தான் அமைந்திருந்தது. பொருளாதார ரீதியாக இதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் கட்டுமானங்கள் அவை.



காங்கேசன்துறையிலிருந்து விரைவில் தமிழகத்துக்கான கப்பல் சேவை ஆரம்பிக்கப ˙போவதாக வந்திருக்கும் செய்திகள் இதன் முக்கியத்துவத்தை மேலும் அதிகரிக்கின்றது. வடக்கிலிருந்து உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் சிலவற்றை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்கள் இதன் மூலமாக ஏற்பட்டிருப்பதாக வர்த்தகத் துறையினர் எதிர்பார்க்கின்றார்கள். வர்த்தக ரீதியாக இந்தப் பகுதியின் முக்கியத்துவத்தை இது அதிகரிக்கின்றது.

இந்த நிலையில், வலிகாமம் பகுதியில் விடுவிக்கப்பட்ட காணிகளில் எவ்வாறான பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பாக ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழர் பகுதிகளைப் பொருளாதார ரீதியாக உயர்த்தக் கூடிய திட்டங்களில் தமது கவனத்தைச் செலுத்தும் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல. இதில் தமிழர்கள் தான் அக்கறை செலுத்த வேண்டும்.

அரசியல் தீர்வு வரட்டும் எனக் காத்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. எம்மை பலப்படுத்தும் வகையில் எமக்கான பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு என்ன செய்ய முடியும் என்பதையிட்டு புலம்பெயர்ந்த தாயகத்தில் உள்ள முதலீட்டாளர்கள், இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆராய்ந்து அதற்கான செயற்பாடுகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

வலிகாமம் வடக்கு பகுதியில் இடப்பெயர்வுக்கு முன்னர் இருந்த மக்களில் பெரும்பாலானவர்கள் வேறு இடங்களில், அல்லது வேறு நாடுகளில் குடியேறிவிட்டனர் அவர்களில் பெரும்பாலானவர்கள் மீண்டும் வந்து அந்தப் பகுதிகளில் தமது வாழ்க்கையைத் தொடர்வர்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல. தமது காணிகளை மீளப்பெற்று அவற்றை விற்பனை செய்வதற்கு அவர்கள் அக்கறைப்படக் கூடும். அதனால், அந்தப் பகுதிகளின் மக்கள் தொகை குறைவானதாகவே இருக்கப் போகின்றது.

பொருளாதார நடவடிக்கைகளுக்கு, குறிப்பாக ஏற்றுமதி இறக்குமதியுடன் தொடர்புபட்ட வர்த்தக நடவடிக்கைகளுக்கு இந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்வது பொருத்தமானதாக இருக்கும். அவசர கட்டுமானங்கள், திட்டமிட்ட முறையில் நகரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்குத் தடையாக அமைந்து விடலாம். அரசாங்கம் இந்த விடயத்தில் அக்கறை காட்டப்போவதில்லை.

அதனால், தமிழ் மக்கள் குறிப்பாக புலம் பெயர்ந்த மக்கள், பொருளாதார நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் ஆலோசனைகளுடன் இந்தப் பகுதியை எவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும் என்பது தொடர்பில் ஆராய்ந்து அதற்கான திட்டம் ஒன்றை முன்னெடுப்பது பயனுள்ளதாக இருக்கும். கிடைத்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வதற்கு தவறக்கூடாது.

வலிகாமம் இடப்பெயர்வு குறித்த முக்கிய தகவல்கள் சிலவற்றுடன் அடுத்த வாரம் சந்திப்போம்.

# ஈழத்தமிழர் அரசியலில் ஐ.நா.சபையும் பான்கீமூனும்

இலங்கைத்தீவின் அரசியலுடன் அதிகம் பரீட்சயமான ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளரின் இலங்கை வருகை அதிக கேள்விகளை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக 2009 போர்க்கால அரசியலுடன் நெருக்கமான உறவைத் தந்துள்ள பான் கீ மூன் 06.02.2023 அன்று மீண்டும் இலங்கை வந்துள்ளார்.

பசுமை அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றத்திற்கான தென்கொரியாவில் இயங்கும் அமைப்பொன்றின் (*Global Green Growth Institute*)பணிப்பாளராக கடமையாற்றும் பான் கீமூன் இலங்கையுடனான உடன்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் வருகைதந்துள்ளார். அவரது விஜயம் பசுமை அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றத்திற்கானதாக அமைந்திருந்தாலும் 2009களில் ஐ.நா. செயலாளராக பணி புரியும் போது அவர் மேற்கொண்ட அரசியல் பற்றிய கேள்விகளை மீள எழுப்பியுள்ளது.

இக்கட்டுரையும் ஈழத்தமிழரது அரசியலில் ஐ.நா. சபையின் பங்கினை புரிந்து கொள்வதாக அமையவுள்ளது.

2009க்குப் பின்னான இலங்கைத்தீவின் அரசியலில் மேற்கு சீன இழுபறி தொடர்ச்சியான போக்கினைக் கொண்டுள்ளது. அதன் தற்போதுள்ள நகர்வு இராஜதந்திர மானதாகவே உள்ளது. வாராவாரம் மேற்குனதும் சீனாவினதும் இராஜ தந்திரிகள் படையெடுப்பு இலங்கைத் தீவை நோக்கியதாக அமைந்துள்ளது.

அந்த வரிசையில் ஒருவராக மீண்டும் பான் கீ மூன் வருகை தந்துள்ளார்.

சபையாக மாற்றிக்கொண்டது. வீட்டோ எனும் அதிகாரத்தைக் கொண்டும் பாதுகாப்புச் சபை என்ற அலகை வைத்துக் கொண்டும் இயங்கும் ஐ.நா. சபையானது மேற்குலகத்தின் சபையாகவும் அதன் பொதுச் செயலாளர்கள் மேற்குலகத்தின் அடிவருடிகளாக செயல்படுவதும் வழமையான அரசியலாக உள்ளது. உலகத்தை மேற்கின் இரா



ணுவ வலிமைக்குள்ளால் வெளிப்படுத்தும் ஆக்கிரமிப்புகளையும் அழிவுகளையும் மறைப்பதற்கான ஒரு நிறுவனமாக ஐ.நா. சபை விளங்குகிறது. அதன் ஜனநாயகமும் அமைதி மற்றும் சமாதானமும் மேற்குலகத்தின் நலனுக்கானதாகவே கட்ட மைக்கப்பட்டுள்ளது. வெளிப்படையாகப் பார்த்தால் உலகளாவிய தளத்தில் பாரிய கட்டமைப்பைக் கொண்டு இயங்கும் ஒரே நிறுவனமாக காணப்படுகிறது. அது தென் பூகோள

காணாமல் போனவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் சரணடைந்தவர்கள் என்பதுடன், போர் முடிந்த பின்னர் கொல்லப்பட்டவர்கள் பற்றிய எந்தத் தகவலும் இல்லாத நிலையை தனித்து இலங்கை அரசாங்கம் மட்டுமன்றி ஐ.நா.சபையும் மறைத்துள்ளது. அதன் பொறுப்புக் கூறல், அரசியல் காணாமல் போயுள்ளது. இது மட்டுமல்லாது இறுதிப் போர்

சாட்சியமற்றுப் போனதற்கு வன்னியிலிருந்து ஐ.நா. சபையின் அலுவலகங்கள் முற்றாக வெளியேற்றப்பட்டமையும் பிரதான காரணமாகும். அதனை இலங்கை ஆட்சியாளர்களுக்காகவே ஐ.நா. சபை அப்போது மேற் கொண்டிருந்தது. அவ்வாறே தமிழ் மக்கள் அடைக்கப்பட்ட அகதி முகாம்களை பார்வையிடுதல் என்ற போர்வையில் முகாம்களுக்கு விஜயம் செய்த பான் கீ மூன் இலங்கை அரசாங்கத்திற்கு நற்சான்றிதழ் வழங்கி

ஜெனீவா அரங்குக்கான அரசியல் என்பதை ஈழத்தமிழர் நன்கு புரிந்து வைத்துள்ளனர். உலகளாவிய அரசியலின் நலன்களுக்கான ஐ.நா. சபை செயல்படுகிறது. அதன் உண்மையான வடிவம் ஐ.நா.வின் விதிகளாலும் நியமங்களாலும் மறைக்கப்படுகிறது. அல்லது ஏமாற்றப்படுகிறது. உலகில் ஒவ்வொரு தேசியங்களதும் சுயநிர்ணயத்தை அங்கீகரிப்பதாக வரைந்து வைத்துள்ள விதிகள் போலியானவையாகவே காணப்படுகிறது. இலங்கைத் தீவில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியில்


கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்




காணப்படுகிறது. அதிலும் ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தீன மெரிக்க நாடுகளில் அதன் போலி தெளிவாகவே புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. நாடுகளது புவிசார் மற்றும் பூகோள நலனுக்குள்ளால் ஐ.நா.சபை இயங்கிறது. நாடுகளின் சபை என்பதை மீள உறுதிப் படுத்துவதில் கவனம் கொள்கிறது.

அதிலும் ஐ.நா. மேற்கு நாடுகளின் சபையாகவே என்றும் பணியாற்றுகிறது. தேசிய இனப்பிரச்சினைகளுக்கு தீர்வற்ற உலகத்தில் ஈழத்தமிழர் மட்டுமல்ல உலகிலுள்ள தேசியங்கள் அனைத்தும் காணப்படுகின்றன. கிழக்கு ஐரோப்பிய தேசிய இனங்கள் மீதான தீர்வுகள் அனைத்தும் ஏகாதிபத்தியங்களது நலனிலே தங்கியுள்ளது. அதனைப் போன்றதல்ல இலங்கைத்தீவின் இனப் பிரச்சினைக்கான தீர்வு. இது இந்து சமுத்திரத்தினது புவிசார் அரசியலிலும் பூகோள அரசியலிலும் தங்கியுள்ளது. அதன் நலன்களே தீர்வுக்கான நகர்வை சரிவர தீர்மானிக்க உதவும்.

எனவே பான் கீ மூன் வருகை மீளவும் ஈழத்தமிழரது அரசியலின் கடந்த காலத்தை பற்றிய தேடலை ஏற்படுத்தியுள்ளது. அது தவிர்க்க முடியாதது. ஐ.நா. என்பது உலகளாவிய அமைப்பு. அதன் தலைமை என்பது அனைத்து உலகளாவிய தேசியங்களதும் பிரதிநிதி. அந்த அடிப்படையிலேயே ஈழத்தமிழரது பார்வை பான் கீ மூன் சார்ந்தும் ஐ.நா. சபை சார்ந்தும் அமைந்திருந்தது. ஆனால் நடைமுறையில் ஏற்பட்ட துயரங்களும் அழிவுகளும் ஐ.நா.வின் பங்களிப்புடனேயே நிகழ்ந்ததென்பது

அவர் பசுமை அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பில் வருகை தந்தாலும் அதற்குப் பின்னால் தெளிவான மேற்கின் அரசியல் பதிந்துள்ளது. இதனையே முன்னாள் நோர்வேயின் விசேட தூதுவரும் அண்மைக் காலத்தில் ஆற்றியிருந்தார் என்பது இதே பகுதியில் முன்னர் குறிப் பிடப்பட்டிருந்தமை நினைவு கொள்ளத்தக்கது.

ஈழத்தமிழர் அரசியலில் எரிக் சொல்ஹெய்ம், அகாசி மற்றும் பான் கீ மூன் போன்ற உலகளாவிய தளத்தில் மேற்கின் நலனுக்காக இயங்கும் அரசியல் தலைவர்களை மறக்க முடியாதவர்களாக உள்ளனர். மன்னிக்கவும் முடியாதவர்கள் என்பதையும் சேர்த்துக் கொள்வது பொருத்தமானது.

அதிலும் ஐ.நா. சபையின் பொதுச் செயலாளராகப் பணியாற்றும் போது ஈழத் தமிழர்கள் முள்ளிவாய்க்காலில் வகை தொகையின்றி சிறுவர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் மற்றும்.ஆயுதம் வைத்திருந்தோர், இல்லாதோர் என்ற வேறுபாடின்றி கொல்லப்பட்ட காலத்தில் எத்தகைய அதிர்வுகளும் இன்றி செயல்பட்ட செயலாளராக விளங்கினார்.

ஏறக்குறைய ஐ.நா. சபையின் கணிப்பீட்டின்படி 70 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்ட போது இலங்கை ஆட்சியாளருக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்காது மௌனம் சாதித்த பொதுச் செயலாளர் பான் கீ மூன். இறுதிப் போரில் சுமார் ஒரு இலட்சத்து நாற்பத்தாறாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக மன்னார் முன்னாள் பேராயர் இராயப்பு ஜோசப் குறிப்பிட்டுள்ளமையும் கவனத்திற்குரியது.

ஐ.நா. சபை என்பது உலகளாவிய அமைதிக்கும் சாமாதானத்துக்குமான சபையாகும் என்பது புரிந்து கொள்ளப்பட்ட விடயம். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் மேற்கு நாடுகளதும் உலக நாடுகளதும் நலனுக்காக கட்டப்பட்ட அமைப்பாக அமைந்த போதும் அதனை மேற்கு தனது நலன்களுக்கான

நாடுகளது வறுமை ஒழிப்பு, பொருளாதார சுமையிலிருந்து மீட்டு மற்றும் கல்விமேம்பாடு போன்றவிடயங்களில் பாரிய மாற்றத்தை தருவதாகவே உள்ளது. சுகாதாரம் காலநிலை மாற்றத்திற்கு எதிரான செயல்பாடுகளை மேற்கொள்ளும் பணியிலும் அகதிகள், சிறுவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்கள் போதைப் பாவனையிலிருந்து மீட்பு போன்ற பல விடயங்களை மேற்கொள்ளும் அமைப்பாக ஐ.நா. விளங்குகிறது. ஆனால் அதன் அரசியலும் போர் தொடர்பில் அது கொண்டுள்ள பாரபட்சமான நடைமுறையும் ஐ.நா. நாடுகளது சபை என்பதையும் அது மேற்கு நாடுகளது சபை என்பதையும் அதிலும் அது அமெரிக்காவின் சபை என்பதையும் தெளிவாகக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

2009களில் பான் கீ மூன் இறுதிப் போர் நிகழ்ந்து கொண்டிருந்த போது வருகை தந்தது மட்டுமன்றி இலங்கை ஆட்சியாளர்களுடன் இணைந்து கூட்டறிக்கை ஒன்றினையும் வெளியிட்டிருந்தார். அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டியதன்படி இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படுவதற்கான 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதுடன், அது விடயத்தில் தமிழ் கட்சிகளுடன் கலந்து ஆராய்வதாகவும் அதனை மேம்படுத்த உடன்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேபோல் மனித உரிமை விடயத்தில் சர்வதேச நியமங்களை ஏற்று இலங்கை கடைப் பிடிப்பதாகவும் அதற்கான உறுதியை ஐ.நா. பொதுச் செயலாளருக்கு வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்தகைய உறுதியளிப்புக்கு பதிலளிக்க வேண்டிய ஒரு தரப்பாக ஐ.நா.சபையும் அதன் பொதுச் செயலாளரும் காணப்படுகின்றனர். அதற்கான பொறுப்புக் கூறலைப் பற்றிய எந்த உரையாடலும் ஐ.நா.சபையாலோ பொதுச்செயலாளராலோ மேற்கொள்ளப்படவில்லை. அது மட்டுமன்றி போரில் கொல்லப்பட்ட பொதுமக்களை விட

விட்டுச் சென்றிருந்தமை நினைவு கொள்ளத் தக்கது. எத்தகைய மனித உரிமை மீறல்களையும் மனிதாபிமானச் சட்ட மீறல்களையும் கண்டு கொள்ளாதது மட்டுமல்லாது அதனை எல்லாம் மறைப்பது போன்று அவரது நடத்தை காணப்பட்டது. உலக நிறுவனத்தின் தலைவரான பான் கீ மூன் ஐ.நா.வின் வரைபுகளையும் நியதிகளையும் மறைத்து விட்டு அரசாங்கங்கள் கூறும் பணி



களை ஆற்றுவதென்பது அதன் வரண் முறைக்கே விரோதமானது. அத்தகைய பதவிக்கே அவமான செயலாகவே தெரிகிறது. மனித உரிமைகளையும் மனிதாபிமானச் சட்டங்களையும் சுயநிர்ணயத்தையும் வரைபுகளில் சுமந்து கொண்டு அத்தகைய விதிகளுக்கு விரோதமாக நாடுகளது நலனுக்காக பணியாற்றுவதென்பது போலித்தனமானதாகவே தெரிகிறது. இத்தகைய போலித்தனத்திற்கு தலைமை தாங்கியவராகவே பான் கீ மூன் செயல்பட்டுள்ளார்.

பான் கீ மூன் தலைமையிலான ஐ.நா. சபை ஈழத்தமிழரது அழிவுகளுக்கு துணை போயுள்ளது என்பது தெளிவாகவே தெரிகிறது. போருக்குப் பின்னரான மேற்குலக அரசியலில் ஏற்பட்ட நெருக்கடியே மனித உரிமைப் பேரவையில் ஈழத்தமிழரது விடயம் பேசப்படுகிறது. சீன-இலங்கை நெருக்கமே

அதன் உண்மையான வலுவை பல வீனப்படுத்தியுள்ளது. சோவியத் யூனியனது வீழ்ச்சியுடன் கலைத்திருக்க வேண்டிய அமைப்பு ஐ.நா. அதனைத் தொடர்ந்தும் எந்த மறுசீரமைப்பும் இன்றி அமெரிக்கா இயக்குகிறது. அதற்கு உலக நாடுகள் அனைத்தும் துணை போகின்றன. அதற்கு அமெரிக்கா உட்பட மேற்கின் நலனே அடிப்படையானது. அதற்கு சேவையாற்றும் தரப்பாகவே பான் கீ மூன் போன்றவர்ளது இருப்பு அமைந்துள்ளது. அவர்களது தனிப்பட்ட நலன்களும் ஐ.நா. வின் மேற்கு நலன்களும் ஒரு புள்ளியில் சந்திப்பதனால் இரு தடவை பொதுச் செயலாளராக பணி புரிய வாய்ப்பு கிடைக்கிறது. இதனையே ஆளுமைகள் என்று மதிப்பீடு செய்யும் துயரம் புலமைத்தளத்திலும் காணப்படுகிறது.

# 2024 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் ஐ.நா.விற்கான முன்னாள் தூதுவர் நிக்கிஹேலே



ஐநாவிற்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் நிக்கிஹேலே 2024 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

பின் வாங்குவதற்கான நேரம் இது வல்ல வலுவான பெருமைமிக்க அமெரிக்காவிற்கான தருணம் இதுவென அவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

குடியரசுக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடப் போவதாக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ள நிலையிலேயே அதே கட்சியை சேர்ந்த நிக்கி ஹேலேயும் இதனை அறிவித்துள்ளார்.

டொனால்ட் டிரம்பிற்கு சவால் விடப் போவதில்லை என முன்னர் தெரிவித்திருந்த நிக்கிஹேலே எனினும் தலைமுறை மாற்றங்களை கருத்தில் கொண்டு தான் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க காங்கிரஸ் மீது டிரம்பின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட தாக்குதலிற்கு ஹேலே டிரம்பை கண்டித்திருந்தார். அவரது செயல்கள் வரலாற்றினால் மோசமாக மதிப்பிடப்படும் என அவர் தெரிவித்திருந்தார்.

குடியரசுக்கட்சியின் ரொன் டிசான்டிஸ் மற்றும் முன்னாள் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் ஆகியோரும் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளனர்.

# உலக பணக்காரர் பட்டியலில் 3ம் இடத்தில் இருந்த அதானி 24வது இடத்திற்கு தள்ளப்பட்டார்



அதானி குழுமம் மீதான பங்குச் சந்தை மோசடி தொடர்பாக அமெரிக்காவை சேர்ந்த ஹிண்டன்பர்க் ஆய்வு நிறுவனம் அறிக்கை வெளியிட்டது. இது அதானி குழுமத்துக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. இந்தநிலையில், கடந்த 13 வர்த்தக நாட்களில் அதானி குழும நிறுவனங்களின் சந்தை மதிப்பு ரூ.10 லட்சம் கோடிக்கு மேல் சரிந்து விட்டது.

அதன்படி கடந்த டிசம்பரில் ரூ.12,40,353 கோடியாக இருந்த அதானியின் சொத்து மதிப்பு இன்று ரூ.4,33,297 கோடியாக வீழ்ச்சியடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது. அதானி சொத்து மதிப்பு வீழ்ச்சியடைந்ததை அடுத்து உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் 3வது இடத்தில் இருந்த கவுதம் அதானி 24வது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

அதானி குழும பங்கு விலைகள் ஒரே நாளில் 5 சதவீதம் சரிந்ததால் அவற்றின் சந்தை மதிப்பு ரூ.51,525 வீழ்ச்சி அடைந்தது. அதானி குழும பங்கு விலைகள் இன்றும் 5 சதவீதம் சரிந்ததால் சந்தை மதிப்பு மேலும் ரூ.50,000 கோடிக்கு மேல் வீச்சியடைந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இந்த விவகாரத்தை நாடாளுமன்ற மக்களவையிலும், மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சிகள் எழுப்பி பெரும் அமளியில் ஈடுபட்டன. ஓய்வுபெற்ற நீதிபதி இந்த விவகாரம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் வக்கீல்கள் எம்.எல்.சர்மா, விஷால் திவாரி ஆகியோர் பொதுநல மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்களை தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது.

# இலங்கையின் 75வது சுதந்திர தினம்:-

(7ம் பக்கத் தொடர்ச்சி) உள்ளூர் தலைமைத்துவங்கள் மேலெழுந்து வரும். அப்படி ப்பட்ட கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில் தான் தேர்தல் என்று வந்ததும் வேட்பாளர்களைத் தேடி அலையும் ஒரு நிலை.

அதிலும் பெண்கள் பொறுத்து உள்ளூா ராட்சித் தேர்தல்களில் 25 விகிதம் பெண் வேட்பாளர்கள் இருக்க வேண்டும் என்று சட்ட ஏற்பாடு உருவாக்கப்பட்ட பின்னர் தான் கட்சிகள் பெண்களை வேட்பாளர்களாக இணைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மற்றும் படி பால் சமநிலையை பேண வேண்டும் என்று எத்தனை கட்சிகள் சிந்திக்கின்றன?

எனவே கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட முடியாத தமிழ்க் கட்சிகள் குறைந்த பட்சம் கட்சிகளைக் கூட உரிய கட்டமைப்புகளுக்கூடாகக் கட்டியெழுப்ப வில்லை. இருக்கின்ற சில கட்டமைப்பு களும் கூட விசுவாசக் கட்டமைப்புகளே தவிர, அரசியல் மயப்படுத்தப்பட்ட கட்டமைப்புகள் அல்ல.

இவ்வாறான ஒரு வெற்றிடத்தில் தான் போராட்டம் என்று வரும்பொழுது தனிமனித முன்னைப்புகள் துருத்திக் கொண்டு தெரிகின்றன. படைப்புத்திறன் குறைந்த போராட்டங்கள் மக்களையும் ஊடகங்களையும் வெளியுலகத்தையும் போதிய அளவுக்கத் ஈர்க்கத் தவறுகின்றன.- கட்டுரையாளர் நிலாந்தன்


SRI MARIYAMMA ASTROLOGER & JOTHIDAM
World Famous Indian Astrologer



Pandit: Guruji Arjunraj
Specialist in palm, Face & Photo, Horoscope Reading
Most Powerful Spiritualist from India
ARE YOUR DEPRESSED LONELY?
I will remove and destroy all Bad Luck, Witchcraft, Obeya, Jado, Voodo & Protect your From all evils.
416-722-9498



AII RELIGIONS WELCOME! & PRIVATE AND CONFIDENTAL

OPEN7 DAYS
9AM - 8PM

I will read your past, present and future by reading your palm and face. We attained this study since 300 years in our family from fathers and forefathers. I will read the influence of effects of sun moon stars and planets on its events on your life. Please try you visit me regarding your health, family, Business, Job, Child, Astrology Vasthu,Dhrusti, Enemy,Court, Marriage, Love, Education and detailed reading and Visa all matters. I can solve it if your have any difficulty or struggle in your life then your life will be successful and bright. Please meet me once and know your readings.

- Name & Date Birth
- Hand Reading
- Past, Present and Future
- Overseas & Travel
- Marriage, Family Matters
- Husband & wife
- Children Education
- Children Mistake
- Property Court
- Enemy Problem

- Face Reading
- Horoscope
- Education & Work
- Love & Money Problem
- Divorce
- Sexual Problem
- Health & Business
- Jealousy & Black Magic
- Evill Affection
- Drinking Problem

MEET ME ONCE & SEE YOUR LIFE CHANGE 100%, REMOVAL OF BLACK MAGIC & GIVE PROTECTION
2607 Eglinton Ave, East Scarborough, ON M1K 2S2
(Eraa Super Market Upstairs, Unit #6) (Brimley & Eglinton)

# ஜேர்மனியின் வெளியேற்றம் பாதகமானதா?

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் ,லங்கை தொடர்பான அனுசரணை நாடுகள் குழுவில் இருந்து ஜேர்மனி விலகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. ஜேர்மனியின் இந்த வெளியேற்றம் இலங்கைக்குச் சாதகமான ஒன்றாக அமையலாம் என்ற எதிர்பார்ப்பு சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஏனென்றால், அனுசரணை நாடுகள் குழுவில் இடம் பெற்றிருந்த முக்கியமான நாடுகளில் ஒன்று ஜேர்மனி. அவ்வாறான நாடு இந்தக் குழுவில் இருந்து வெளியேறுவதை எவரும், குறைத்து மதிப்பிட மாட்டார்கள். அனுசரணை நாடுகள் குழுவில் பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, வடக்கு மசிடோனியா, மொன்டனிக்ரோ, மலாவி என ஆறு நாடுகள் இடம் பெற்றிருந்தன.

இந்த அனுசரணை நாடுகள் குழு தான், இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடரில் தீர்மானத்தை கொண்டு வந்து நிறைவேற்றியது.

இவ்வாறான குழுவில் இருந்து ஜேர்மனி விலகிக் கொள்வதை இலங்கை சாதகமானவே நோக்கும் என்பதிலும் சந்தேகம் இல்லை.

அதிலும் அனுசரணை நாடுகள் குழுவில் உள்ள ஒரே ஐரோப்பிய ஒன்றிய நாடும் ஜேர்மனி தான். பிரிட்டன், வடக்கு மசிடோனியா, மொன்டனிக்ரோ போன்ற ஐரோப்பிய நாடுகளும் அனுசரணை நாடுகளின் குழுவில் இடம் பெற்றுள்ளன. ஆனால். பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இல்லை. அதிலிருந்து வெளியேறி விட்டது.

அதுபோலவே, வடக்கு மசிடோனியாவும், மொன்டனிக்ரோவும், ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்களாகவில்லை. அதற்கு விண்ணப்பித்திருக்கின்றனவே தவிர, அந்த விண்ணப்பம் இன்னமும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்த நிலையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் குரலாக ஜேர்மனியே ஒலித்து வந்தது.

தற்போது ஜேர்மனி வெளியேறியுள்ளதால், அனுசரணை நாடுகள் குழுவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போயிருக்கிறது. இது அனுசரணை நாடுகள் குழுவுக்கு முக்கியமானதொரு பலவீனம். ஏனென்றால், இலங்கையில் பொறுப்புக் கூறல், மனித உரிமைகள், நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் தீர்மானங்களைக் கொண்டு வருவதிலும், நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுப்பதிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்கு அதிகம்.

பல்வேறு வழிகளில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுத்து வந்திருக்கிறது. குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம், இராணுவ மயநீக்கம், மனித உரிமைகள் போன்றவற்றுக்காக ஐரோப்பிய ஒன்றியம் கடுமையான தீர்மானங்களையும் எடுத்திருக்கிறது. எடுக்கவும் தயாராக இருப்பதாக எச்சரித்திருக்கிறது.

இவ்வாறான ஒரு பின்புல அழுத்தம் கொடுக்கும் தரப்பை அனுசரணை நாடுகள் இழந்திருக்கின்றன. இது நிரந்தரமானதல்ல, ஆனால் இப்போதைக்கு இது முக்கியமான ஒரு விடயம். அதேவேளை, தமிழர்களைப் பொறுத்த வரையில் ஜேர்மனியின் வெளியேற்றத்தை பாதகமானதெனக் கூற முடியாது. ஏனென்றால், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இருந்து ஜேர்மனி வேறுபட்டதாகவே இருந்து வந்திருக்கிறது.

ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட 51–1 தீர்மானத்தை நீர்த்துப் போன ஒன்றாக மாற்றியதில் ஜேர்மனிக்கு அதிக பங்கு உள்ளது. கடுமையான தீர்மானம் கொண்டு வரப்படுவதை ஜேர்மனி எதிர்த்தது. தீர்மான வாசகங்களின் கடினத் தன்மையை குறைத்து. அதனை நீர்த்துப் போகச் செய்தது ஜேர்மனி தான் என்பது அப்போது, இராஜதந்திர மட்டங்களில் பேசப்பட்ட விடயம். இலங்கையுடன் கொண்டிருக்கும் வர்த்தக உறவுகளை ஜேர்மனி



சீர்குலைக்க விரும்பவில்லை. இலங்கையில் 2005,ற்குப் பின்னர் 127 மில்லியன் டொலர்களை முதலீடு செய்திருக்கிறது ஜேர்மனி. இது சீனா, இந்தியா, போன்ற ஏனைய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் அளவுக்கு பாரியதாக இல்லாவிடினும், இந்த முதலீடுகளில் ஜேர்மனி அதிக கவனம் செலுத்துகிறது.

இலங்கையில் 37 வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது அந்த நாடு. விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிலருக்கு எதிராக ஜேர்மனி போர்க்குற்ற வழக்குகளையும் முன்னெடுத்திருக்கிறது. இலங்கையுடன் ஒருவித ஒட்டுறவை வைத்துக் கொண்டிருக்கும் ஜேர்மனி, அனுசரணை நாடுகள் குழுவில் இடம் பெற்றிருந்தமை, கொழும்புக்குச் சாதகமாக இருந்ததே தவிர, பாதிக்கப்பட்ட தரப்பினரான தமிழர்களுக்கு சாதகமானதாக இருக்கவில்லை.

ஜெனிவா தீர்மானத்தின் காத்திரத்தைக் குறைத்து, இலங்கையை அதிக அழுத்தங்கள் நெருக்கடிகளில் ,ருந்து காப்பாற்றியது அந்த நாடு. இவ்வாறானதொரு நிலையில் அனுசரணை நாடுகள் குழுவில் இருந்து ஜேர்மனி வெளியேறியிருப்பது, தமிழர் தரப்பை பொறுத்தவரையில் பாதகமானதெனக் குறிப்பிட முடியாது.

அனுசரணை நாடுகள் குழுவில் இருந்து வெளியேறியமைக்கான காரணத்தை ஜேர்மனி அதிகாரபூர்வமாக வெளிப்படுத்தவில்லை.

அமெரிக்காவின் வெளியேற்றத்தை அடுத்தே, தாங்கள் அதில் இடம் பெற்றதாகவும், தற்போது அமெரிக்கா மீளத் திரும்பியிருப்பதால் தங்களின் இருப்பு அவசியமில்லை என்றும் ஜேர்மனி இராஜதந்திரிகள் கூறியிருப்பதாக தெரிகிறது. டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக இருந்த போது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா வெளியேறுவதாக அறிவித்திருந்தார். இதனால் பிரித்தானியாவே இலங்கை குறித்த தீர்மானங்களைக் கொண்டு வரும், அனுசரணை நாடுகள் குழுவுக்கு தலைமையேற்றது. இவ்வாறான நிலையில் தான் அமெரிக்காவின் இடத்தை நிரப்புவதற்காக ஜேர்மனி அனுசரணை நாடுகள் குழுவுக்கு வந்ததாக கூறுகிறது.

இப்போது அமெரிக்கா ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு மீண்டும் வந்து விட்டது என்பதால், தாங்கள் விலகி விட்டதாக ஜேர்மனி கூறுவதில் சில சிக்கல்கள் உள்ளன. அமெரிக்கா 2022ஆம் ஆண்டே ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குள் வந்து விட்டது. ஆனாலும், 51–1 தீர்மானத்தைக் கொண்டு வந்த அனுசரணை நாடுகளின் குழுவில் அமெரிக்கா இடம் பெற்றிருக்கவில்லை. ஆரம்பத்தில் இருந்து அமெரிக்காவே தீர்மானங்களைக் கொண்டு வரும் அனுசரணை நாடுகள் குழுவுக்கு தலைமை தாங்கியது. பின்னர், அந்தப் பொறுப்பு பிரித்தானியாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு 2022இல் அமெரிக்கா கூறி விட்டது. இப்போது ஜேர்மனி வெளியேறியுள்ள நிலையில், அனுசரணை நாடுகள் குழுவில் அமெரிக்காவின் உள்வருகை தவிர்க்க முடியாத ஒன்றாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, ஜேர்மனியின் வெளியேற்றத்தை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் முற்படலாம் என்று கருதப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்துடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம், ஜேர்மனியைப் பயன்படுத்தலாம். இலங்கைக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையின் ஊடாக ஐரோப்பிய ஒன்றியம் தான் கடும் அழுத்தங்களைப் பிரயோகித்தது. மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில், மனித உரிமைகள் நிலவரங் களைக் காரணம் காட்டி ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை ரத்துச் செய்யப் பட்டது. எனினும், மைத்திரி ரணில் கூட்டு அரசாங்கத்தில், மங்கள சமரவீரவின் தீவிர முயற்சியால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மீளக் கிடைத்தது. அதற்காக 27 நிபந்தனைகளை உள்ளடக்கிய உடன்பாட்டில் அரசாங்கம் கையெழுத்திட்டது. அதில் ஒன்று தான், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலீடாக, சர்வதேச மனித உரிமைகள் தராதரங்களுக்கு அமைய புதிய சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பது. இந்த நிபந்தனையை இலங்கை அரசாங்கம் இன்னமும் நிறைவேற்றவில்லை. சில வாரங்களில்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்




புதிய சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்படுகிறது. இவ்வாறான நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் நெருக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. பொருளாதார முதலீடுகளைக் கவருவது, மற்றும் உதவிகளைப் பெறுவது மாத்திரம் அதற்குக் காரணம் அல்ல. பொறுப்புக்கூறல் தொடர்பான சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பிக் கொள்வதும் தான்.

அமெரிக்காவைப் பின்பற்றி கனடாவும், தனிநபர்கள் மீதான தடைகளை அறிவித்து விட்டது. அடுத்து ஐரோப்பிய ஒன்றியமும் அதனைப் பின்பற்றலாம் என்ற கருத்து உள்ளது. ,வ்வாறான நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்துடன் நெருங்கிச் செல்வதன் மூலம், தடைகளில் இருந்து தப்பிக்கலாம் என்று அரசாங்கம் நினைக்கிறது.


ராஜபக்ஷ விசுவாசிகளின் அரசாங்கம், ராஜபக்ஷவினரைக் காப்பாற்றுவதற்காகவே இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தை (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்




ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும் ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். தொழில், வியாபார போட்டிகள் இருந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது. உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது. தெய்வ வழிபாடு அவசியம் தேவை.





ரிஷபராசி அன்பர்களே! கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல் தீரும். எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகி சென்று விடுவார்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். எதிர்பார்த்த பணவரத்து திருப்தி தரும். கடன் பிரச்சனை கட்டுக்குள் இருக்கும். உத்யோகத்தில் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும்.





மிதுனராசி அன்பர்களே! அனுகூலம் ஏற்படும். வீண்செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் கடன் விவகாரங்களில் கவனமாக செயல்படுவது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும்.




கடகராசி அன்பர்களே! வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற மனக்கவலை உண்டாகும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிரபந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். உததியோகத்தில் சக ஊழியர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு.




சிம்மராசி அன்பர்களே! தேவையற்ற மன சஞ்சலம் நீங்கும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சனை வராமல் தடுக்கலாம். திடீர் பண தேவை உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம். நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது.




கன்னிராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். முதலீடுகளில் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. வீண் வாக்குவாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் சாதுரியமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை லாபகரமாக செய்வர். தேவையான பண உதவியும் கிடைக்கும். எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்வது நன்மை தரும்.





துலாம் ராசி அன்பர்களே! தடைபட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். மனதில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அதிர்ஷ்டம் உண்டாகும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தாலும் கொள்கைக்காக பாடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஒரே குறிக்கோளுடன் இருப்பதை விட்டு வாடிக்கையாளர் தேவை அறிந்து செயல்படுவது முன்னேற்றத்திற்கு உதவும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவர். சக ஊழியர்கள் மேலதிகாரிகளால் நன்மை உண்டாகும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதையும் சமாளிக்கும் திறமை உண்டாகும். எதிர்பாலினிடம் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். மருந்து, ரசாயனம் போன்ற தொழில்களில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும்.







தனுசுராசி அன்பர்களே! தடைகள் அனைத்தும் நீங்கும். வீண் குற்றச்சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. பணத்தேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் திறமை உண்டாகும். அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது.




மகரராசி அன்பர்களே! தடைகள் அனைத்தும் அகலும். வேலை பளுகாரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். அக்கம்பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் ஏற்பட்டு சரியாகும். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது.புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். சக ஊழியர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நன்மை




கும்பராசி அன்பர்களே! எல்லாவற்றிலும் சாதகமான பலனே கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்கும். லாபம் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும். புதிய வேலை சாதகமான பலன் கிடைக்கும்




மீனராசி அன்பர்களே! காரியங்கள் நன்றாக முடியும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல் ஆர்டர் கிடைப்பதில் தாமதம் போன்றவை ஏற்பட்டாலும், தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்தியோகத்தில் வேலைபளு. கூடுதல் பொறுப்புகள் உண்டாகலாம். எல்லா பிரச்சனைகளும் சரியாகும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## பிச்சையெடுக்க சுதந்திரமா?

(15ம் பக்கத் தொடர்ச்சி) பேரரசுகளின் இழுவிசைகளுக்குள், கேந்திர முக்கியத்துவம் மிக்க ஒரு ஜல சந்தியில், காணப்படும் மிகச் சிறிய நாடானது, தனக்குள் அடிபடுமாக இருந்தால் அது பேரரசுகள் பங்கிடும் ஓர் அப்பமாக மாறிவிடும். அது தான் இப்பொழுது நடக்கிறது.

இலங்கைத்தீவு இப்பொழுது ஒரு சுதந்திரமான நாடு அல்ல. இறமையுள்ள நாடும் அல்ல. தமிழ் மக்கள் சுதந்திரமாக இல்லாதவரை சிங்கள மக்களும் சுதந்திரமாக இருக்க முடியாது என்பதைத் தான் கடந்த 13 ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன. போரில் வெற்றி பெற்ற பின்னரும் ஏன் இந்த நாடு சுதந்திரமாக இருக்க முடியவில்லை? ஏன் இந்த நாடு செழிப்பாக நிமிர முடியவில்லை?

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்த பின்னரும் தமிழ் அரசியலை முன் வைத்து ஏன் ஜெனிவாவில் ஒவ்வொரு ஆண்டும் பதில் கூற வேண்டியிருக்கிறது? வடக்கில் கடலட்டை எப்படி ஒரு ராஜதந்திரக் கருவியாக மாறியது? ஆயுத மோதல்களில் வெற்றி பெற்ற பின்னரும் இந்த நாடு ஐ.எம்.எப் போன்ற அனைத்துலக நிறுவனங்களின் சொற்கேட்டு கீழ்ப்படியும் ஒரு நிலைமை ஏன் ஏற்பட்டது?

இலங்கை அதன் 75வது சுதந்திர தினத்தை கொண்டாடும் ஒரு கால கட்டம் எனப்படுவது ஐ.எம்.எப். போன்ற வெளித்தரப்புகளிடம் கடன் கேட்டுக் கையேந்தும் ஒரு கால மாகவே காணப்படுகிறது. இவ்வாறு வெளிநாடுகளிடமும் உலகப் பொது நிறுவனங்களிடமும் கையேந்தும் ஒருநாடு தன்னை சுதந்திரமான நாடாக கூறிக் கொள்ள முடியுமா? கார்ல் மார்க்ஸின் வார்த்தைகளிற் சொன்னால் ஒடுக்கும் இனம் என்றைக்குமே நிம்மதியாக இருக்க முடியாது அது சுதந்திரமாகவும் இருக்க முடியாது. ஒரே ஒரு விடயத்தில் தான் இப்போதைக்கு சுதந்திரமாக இருக்கலாம். பிச்சையெடுப்பதற்கான சுதந்திரம்.

## அரசியலமைப்பில் இருக்கும் விடயங்களை

(8ம் பக்கத் தொடர்ச்சி) இந்த விடயத்தை நாங்கள் பெரியவிடயமாக அலட்டிக் கொண்டிருக்கிறோம். அன்று வடக்கு கிழக்கு மாகாணத்தில் அனைத்து கட்சிகளும் தேர்தலில் போட்டியிட பகிஷ்கரித்த போது நாங்கள் மாத்திரமே தமிழ் கட்சியாக போட்டியிட்டு எதிர்க்கட்சியாக செயற்பட்டோம். வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையில் முதல் தடவையாக நாங்கள் நுழைந்தோம். இணைப்புக்கு எதிரான எதிர்ப்பின் கீழே நாங்கள் தேர்தலில் போட்டியிட்டோம். முஸ்லிம்களுடன் கலந்துரையாடப்பட்டே அந்த இணைப்பு மேற்கொள்ளப்பட்டது. அந்த இணைப்பில் 3இல் ஒரு பகுதி தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டுத் தான் அந்த இணைப்பு மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக வடக்கு கிழக்கு இணைப்பு அரசியலமைப்புக்கு முரண் என உயர் நீதிமன்றம் தனக்கு கிடைத்த நியாயமான காரணங்களின் பிரகாரம் தீர்ப்பளித்தது. எனவே பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகார பரவலாக்கத்தை கோரும் போதும் அதனை ஏமாற்றுக்காரர், மோசடிக்காரர்கள் என தெரிவிக்கின்றனர். சில கட்சிகள் இந்தியாவையும் குற்றம் சாட்டியிருந்தன. இந்தியா எமது நாட்டுக்கு செய்த பாரியளவிலான மனிதாபிமான உதவிகளை மறந்து செயற்படுகின்றனர்.

## இந்தியாவுக்கு தார்மீக உரிமை கிடையாது

(4ம் பக்கத் தொடர்ச்சி) தீர்வு காண அவதானம் செலுத்துவதில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத் திற்கே மக்கள் ஆணை வழங்கினார்கள் என்பதனால் ஜனாதிபதி அது குறித்தே அவதானம் செலுத்த வேண்டும் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் ஒற்றையாட்சிக்குள் அதிகார பகிர்வு வழங்கப்பட்டாலும் பொலிஸ் அதிகாரத்தில் மாற்றமில்லை என கூறும் ஜனாதிபதியின் உறுதிப்பாடு எவ்வளவு நாட்களுக்கு செல்லுபடியாகும் என்றும் சரத் வீரசேகர கேள்வியெழுப்பியுள்ளார்.

## ஐ.நா.வைத் தலையிடுமாறு கோரும் தென்னிலங்கை சிங்களக்கட்சி!

(6ம் பக்கத் தொடர்ச்சி) புனிதமான ஏற்பாடுகளை அப்பட்டமாக மீறும் வகையிலும் மக்களின் வாக்குரிமையை பறிக்கும் வகையில் நிறைவேற்று அதிகார சபை அரசியலமைப்பிற்கு முரணாக செயற்படுகின்றது. எனவே, இலங்கை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்த விடயத்தில் தலையிடுமாறு ஐ.நா. அலுவலகத்தை கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## விடுதலைப் புலிகளின் தலைவரின் மீள் வரவு பற்றிய பித்தலாட்டத்தின்

(9ம் பக்கத் தொடர்ச்சி) எனவே புலிகளின் மீள்வரவு தொடர்பான புதுப்புரளியைக் கிளப்பி, சிங்கள மக்களை மீளவும் இனவாத சகதிக்குள் சிக்கித் திழைக்க வைக்கும் முயற்சியின் வெளிப்பாடாகவும் பழநெடுமாறான் காட்சி கொடுத்திருக்கிறார்.

உலகம் மிகவும் பரந்து விரிந்து கிடக்கிறது. தொழிலநுட்பமும், ஊடக உலகமும் சகலரையும் சென்று சேர்ந்து விட்டது.

இனியும் பழைய முறைப்படி வந்து யாரையும் ஏமாற்ற முடியாது. அறிக்கைகளையும், பத்திரிகை செய்திகளையும், அரசியல் தலைவர்களின் மேடைப் பேச்சுக்களையும் நம்பி முடிவெடுக்கும் நிலையில் மக்கள் இல்லை.

ஆனால் இந்தியாவும், அதன் இராஜ தந்திர ஜாம்பவான்களும் சுப்பரின் கோடியை விட்டு வெளியில் வரவில்லை. அதனால் தான் அவர்களை இலங்கை என்கிற குட்டித் தேசம் ஏமாற்றத் தொடங்கி 2800 வருடங்கள் ஆகின்றன.

## சூழ்நிலைக் கைதிகளாக தமிழ்த்தேசியத்..

(16ம் பக்கத் தொடர்ச்சி) அரசியற் கட்சிகளும் அவற்றின் தலை மைகளும் அவற்றின் தொண்டர்களும் தெரிந்து கொண்டே நடிக்கிறார்கள். அல்லது தெரிந்து கொண்டே பிழைப்பு நடத்துகிறார்கள். இதை மாற்றிக் கொள்ளாத வரையில் மீட்சியில்லை. இது தொடர்பாக யாராவது சிந்தித்தால் அவருக்கு வெற்றி.

(21ம் பக்கத் தொடர்ச்சி) அவர்களுக்கு சாதகமாக திருப்ப முற்படுவதில் ஆச்சரியம் இல்லை. அதற்கு ஜேர்மனியை கைத்தடியாக பயன்படுத்திக் கொள்ள அவர்கள் முற்படுவதிலும் அதிசயம் இல்லை.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600







